Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 15 வியாழக்கிழமை (31.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 246

# வெளிமாவட்டம் செல்வதற்கான பயண அனுமதி முறையில் மாற்றம்

## நாளை தொடக்கம் நடைமுறைக்கு வருகிறது

யாழ்ப்பாணம், ஜூலை31

**யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து - குடாநாட்டில் இருந்து - வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதி முறையில் மாற்றம் செய்யப்படுகிறது.**

**வெளிமாவட்டத்தில் தங்கும் இடத்தின் உரிமையாளரின் சம்மதம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே, பயண அனுமதி வழங்கும் புதிய நடைமுறை நாளை - ஒகஸ்ட் முதலாம் திகதி - தொடக்கம் அமுலுக்கு வருகிறது.**

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற அரசாங்க உயர் அதிகாரிகள் மற்றும் சர்வதேச, உள் நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் புதிய பயண அனுமதி குறித்து யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அறிவித்தார்.

நேற்று முற்பகல் 11.30 மணிக்கு ஆரம்பமான கலந்துரையாடல் நண்பகல் சுமார் 12.30 மணி வரை நடைபெற்றது.

புதிய பயண அனுமதி நடைமுறை தொடர்பாக தளபதி தெரிவித்த விவரங்கள் குறித்து அறியவந்ததாவது:-

* அரச ஊழியர்களோ, பொதுமக்களோ வெளிமாவட்டம் ஒன்றுக்கு பயணம் மேற்கொள்ள வேண்டுமாயின்,பயண அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தையும் கிராம சேவையாளர், பிரதேச செயலர் ஆகியோரின்சிபார்சுக் கடிதங்களின் மூலப் பிரதிகளையும் 'போட்டோஸ்டட்' பிரதிகளையும் வதிவிடத்துக்கு அருகில் உள்ள சிவில் நிர்வாக அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

விண்ணப்பதாரர் வெளிமாவட்டத்தில் தங்கவுள்ள வீட்டின் அல்லது தங்குமிடத்தின் உரிமையாளர் மற்றும் வாடகைக்கு இருப்போரின் சம்மதத்தையும் அதன் உறுதிப்படுத்தலையும் உரிய வழிமுறை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்மோகன் - பிள்ளையான் சந்திப்பு இடம்பெறாதாம்!

கொழும்பு, ஜூலை 31

சார்க் மாநாட்டிற்காக இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானை சந்திக்க மாட்டார் என இப்போது தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

அவர்கள் இருவரும் சந்திப்பதை இந்திய உயர்மட்ட அதிகாரிகள் விரும்பவில்லை என்றும் மேற்படி சந்திப்புக்கான ஏற்பாட்டு விவரம் பிரதமர் மன்மோகன் சிங்கின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியப் பிரதமர் 'சார்க்' மாநாட்டுக்காகக் கொழும்பு வருகின்ற வேளையில் அவருக்கும் பிள்ளையானுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெறும் என்று ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. (அ-சி)

## மட்டக்களப்பு எம்.பியின் பாதுகாவலர் மீது சூடு

கொழும்பு, ஜூலை 31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் த.கனகசபையின் வீட்டு மெய்ப்பாதுகாவலர் ஒருவர் நேற்று மாலை 5.15 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்திருக்கின்றார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலுவில் பகுதியில் உள்ள கனகசபை எம்.பியின் இல்லத்துக்கு மெய்ப்பாதுகாவலராகப் பணிபுரியும் திவா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இருதரப்பும் பாதுகாப்பு உத்தரவாதம் தந்தால்தான் இம்முறை மடுத் தேவாலயத் திருவிழாவை நடத்தலாம்

### தன்னைச் சந்தித்த அமைச்சர் குழுவிடம் மன்னார் ஆயர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 31

''மன்னார் மடுத் தேவாலயத்தில் இம்முறை திருவிழா இடம்பெறவேண்டுமானால் விடுதலைப் புலிகளும், இராணுவத்தினரும் பாதுகாப்பு உத்தரவாதம் தரவேண்டும்''

- இவ்வாறு மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை நேற்று தன்னைச் சந்தித்த அமைச்சர்கள் மட்ட உயர் குழுவிடம் தெரிவித்திருக்கிறார்.

திருவிழா இடம்பெறும் பகுதியில் ஆயுதப் பிரசன்னமோ அரசியல் நோக்கங்களோ அல்லது இராணுவ நோக்கங்களோ இருக்கக் கூடாது என்றும் அவர் அமைச்சர்களிடம் எடுத்துக் கூறினார்.

இந்த விடயம் குறித்து மன்னார் ஆயர் நேற்றிரவு பி.பி.ஸி தமிழோசைக்குத் தெரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் நாளை மாலை மன்மோகன்சிங்குடன் பேச்சு

கொழும்பு, ஜூலை 31

'சார்க்' மாநாட்டில் கலந்துகொள்வதற்காக கொழும்பு வரும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குழு நாளை மாலை சந்தித்துக் கலந்துரையாடும்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வ ம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படாமல் பாவிக்கப்படும் என்று

## திணைக்கள தலைவர்கள் எழுத்து மூலம் உத்தரவாதம் வழங்கினால் சி.டி.எம்.ஏ.

யாழ்ப்பாணம், ஜூலை 31

அரச திணைக்களத் தலைவர்கள் எழுத்து மூலமான உத்தரவாதம் வழங்கினால் திணைக்களங்களுக்கு மீண்டும் சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்பு வழங்கப்படும்.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி இதனைத் தெரிவித்தார்.

திணைக்களத் தலைவர்களுடன் நேற்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 'சார்க்'மாநாட்டினால் கிடைக்கப்போகும் பயன்களை பட்டியலிடுமாறு அரசுக்கு சவால்!

கொழும்பு, ஜூலை 31

'சார்க்' மாநாடு மூலம் இலங்கைக்குக் கிடைக்கும் நன்மைகள் எவை என்பதை ஜனாதிபதி பட்டியலிட்டு இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று ஐ.தே.கட்சி சவால் விடுத்துள்ளது.

அவ்வாறில்லாமல் 'சார்க்' மாநாடு முடிந்தபின் இலங்கைக்கு அது கிடைக்கும், இது கிடைக்கும் என்று கூட்டறிக்கையை மாத்திரம் வெளியிட்டு மெதுவாக நழுவுகிற வேலையெல்லாம் சரிவராது என்றும் அக்கட்சி கூறியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேற்று மாலை இளைஞன் சூட்டுக்குப் பலி

கொழும்பு, ஜூலை 31

திருகோணமலை தம்பலகாமீத்தில் உள்ள பொற்கேணிப்பகுதியில் நேற்று மாலை ஆறுமுகம் ஜெய்சங்கர் (வயது-29) என்ற இளைஞன் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல்களிலிருந்து முற்றாக இறக்கப்பட்ட பின்னரே பொருள்களின் விலைகள் நிர்ணயம்

### நேற்றிலிருந்து தட்டுப்பாடு நீங்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணத்தில் உணவு மற்றும் உப உணவுப் பொருள்களுக்கு கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாக நிலவி வந்த தட்டுப்பாடு நேற்று முதல் ஓரளவு நீங்கியுள்ளது. பொருள்களின் விலைகளும் சற்றுக் குறைவடைந்தன.

மூன்று கப்பல்களில் காங்கேசன்துறைக்கு எடுத்து வரப்பட்ட உணவுப் பொருள்கள் இறக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருவையாறில் மக்கள் குடியிருப்புகள் மீது 'ஜெற்' விமானங்கள் நேற்றுக்காலை தாக்குதல்கள்

வவுனியா,ஜூலை31

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சிக்கு 4 கிலோமீற்றர் கிழக்கே உள்ள திருவையாறு பகுதி மீது நேற்றுக்காலை விமானப்படையினரின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதக் குருதிக்கு மாற்றீடு மனிதக் குருதியே

(09 ஆம் பக்கமும் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு விசேட கருத்தரங்குகள்

## மூன்று வெவ்வேறு நிலயங்களில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜூலை 31

'உதயன்' பத்திரிகை நிறுவனமும் கொழும்பு யுனிலங்கா நிறுவனமும் இணைந்து இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்காக நடத்தும் விசேட கருத்தரங்குகள் மூன்று இடங்களில் இடம்பெறவுள்ளன.

திருகோணமலை உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசலிங்கமும் யாழ்.மாவட்ட விரிவுரையாளர்களும் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ளனர். கருத்தரங்குகளில் விசேட வினாப்பத்திரமும், கையேடும் வழங்கப்படுவதோடு முதன்மை மாணவர்களுக்கு சிறப்புப்பரிசும், பாராட்டு பத்திரமும் வழங்கப்படவுள்ளன.

கருத்தரங்குகள் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் சனிக்கிழமையும் (02.08.2008), ஆனைக்கோட்டை துரைஜயா மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமையும் (03.08.2008), வடமராட்சி மாலுசந்தி பிரதேச சபை மண்டபத்தில் திங்கட்கிழமையும் (04.08.2008) நடைபெறவுள்ளன.

## கணிதபாட ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். வலயத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஜி.சீ.ஈ (சாதாரண) தர வகுப்பில் கணிதபாடப் பெறுபேறை உயர்த்துவதற்கான செயற்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். கல்வி வலய அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

கோப்பாய்க் கோட்டம் தவிர்ந்த ஏனைய கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைக ளுக்கு இக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

பாடசாலைகளில் கணித பாடம் கற்பிக்கப்படும் ஆசிரியர் ஒருவரை கலந்துரையாடலுக்கு அனுப்பி வைக்குமாறு பிரதிக்கல்விப் பணிப்பாளர் ரி. இராஜலிங்கம் கேட்டுள்ளார். (1)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் பொ.மகேஸ்வரன் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாக்கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பொ.மகேஸ்வரன் அவர்கள் முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து சேவையாற்றி 17.09.2008 இல் அறுபதாவது வயதில் ஓய்வு பெறவிருக்கிறார்.

அவரது ஆசிரியத்துவத்தைப் பாராட்டிப் போற்றுமுகமாக அதிபர் திரு.வீ.கணேசராஜா தலைமையில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

02.08.2008 சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு அதிபர் அலுவலகத்தில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலுக்கு பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இ.விக்கினேஸ்வரன்
தலைவர்,
கணிதத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## ஆடிஅமாவாசையை ஒட்டி வர்த்தக நிறுவனங்களுக்கு நாளை விடுமுறை

ஆடிஅமாவாசைத் தினத்தை ஒட்டி நாளை வெள்ளிக்கிழமை சகல வர்த்தக நிறுவனங்களையும் மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கும்படி யாழ்ப்பாணம் வணிகர் கழகம் சகல வர்த்தகர்களையும் கேட்டுள்ளது. ஆடிஅமாவாசைக் கடமைகளை அவர்கள் மேற்கொள்ள வசதியாக இந்த விடுமு றையை வழங்கும்படி வணிகர்கழகம் சங் கம் அறிவித்துள்ளது. (1)

## பாடசாலைப் பணிகளுக்கு சிமெந்து விநியோகம்

யாழ். மாவட்ட பாடசாலைகளில், பாடசாலை வேலைகள் பகுதியினூடாக கட்டட நிர்மாண/திருத்த வேலைகளை மேற்கொள்ளவுள்ள ஒப்பந்தகாரர்களிற்கு சிமெந்து வழங்க ஏற்பாடாகியுள்ளது.

சிமெந்து தேவைப்படும் ஒப்பந்தகாரர்கள் பாடசாலை வேலைகள் பகுதியினது சிபாரிசுடன், மருதனார்மடத்தில் உள்ள, லங்கா சிமெந்து நிறுவன முகாமையாளருடன் நாளை வெள்ளிக்கிழமைக்குள் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மேலதிக கல்விப் பணிமனை பாடசாலைகள் வேலைகள் பகுதி பொறியியலாளர் ஜி.சிவபாலன் கேட்டுள்ளார். (1)


## தவறிவிட்டது

கைதடி மேற்கு, கைதடியைச் சேர்ந்த வைத்திலிங்கம் வசந்தன் என்பவரின் (841932897V) இலக்கமுடைய தே.அ.அட்டை யாழ்ப்பாணத்துக்கும் கச்சேரிக்கும் இடையில் 30.07.2008 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கச்சேரியடியிலுள்ள சன்லைட் கொமினிகேசன் அல்லது கைதடி ரங்கன் வீடியோ கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

## வீடு வாடகைக்குத்தேவை

வங்கியில் பணிபுரியும் மூன்று பேர் கொண்ட குடும்பமொன்றிற்கு நல்லூரர் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
T.P.0777570217


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சக ஆசிரியர்
ப.சிவகுமார் அவர்களின் தந்தை

### தில்லையம்பலம் பஞ்சாட்சரம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## மரண அறிவித்தல்கள்

### நவரட்ணம் சந்திரகாந்தன்

தம்மளை, கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்ட நவரட்ணம் சந்திரகாந்தன் 24.07.2008 வியாழக்கிழமை அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் நவரட்ணம்-தவமணியின் அன்பு மகனும் சிவகாந்தன், அஜந்தா, ஜெயந்தி, சுகந்தி, விஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை (29.07.2008) செவ்வாய்க் கிழமை கனடாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆறுமுகம் மங்கையர்க்கரசி (மாமி).

தம்மளை, கந்தரோடை,
சுன்னாகம்.

(7697)

### முருகேசு திருஞானம் (நல்லையா)

கண்டாவளையைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாளை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்பொழுது நல்லூரில் வசித்தவருமான முருகேசு திருஞானம் (நல்லையா) நேற்று (30.07.2008) புதன் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர் முருகேசு தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி காசித்தம்பி தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், நவநீதன் (கூட்டுறவுத் திணைக்களம்), குயின்சன் (லண்டன்), சரண்யா (வலயக்கல்வி அலுவலகம், வேலணை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2008) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 2 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 45, புதிய சிவன் வீதி,
நல்லூர்.

தகவல்:
நி.நவநீதன் (மகன்)

(76300)

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் குணபாலசிங்கம்

### (சின்னராசு-சின்ராசு)



கேணியடி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் குணபாலசிங்கம் நேற்று (30.07.2008) புதன்கிழமை பிற்பகல் 5 மணியளவில் சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-இராசமணி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லையா - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், மஞ்சுளா, வத்சலா (மதினி - பிரான்ஸ்), கோபிலன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தவக்குமார், சுகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், சதுர்ஜன், தாட்சாயினி, அகிஷா, ஆதுஷா, விதுர்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், வேலாயுதபிள்ளை (லண்டன்), சண்முகலிங்கம் (கோண்டாவில்), சிதம்பரநாதன், துரைசிங்கம், இராஜேஸ்வரி (கனடா), சண்முகநாதன், சோதிநாதன் (ஜேர்மனி), மோகனதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், விஜயலட்சுமி, கமலேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராணி மற்றும் டில்லி ராணி, விஜயரத்தினம் (கனடா), தெய்வேந்திரராணி, சாந்தி, பத்மசெல்வி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2008) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(76801)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமறைக் கலாமன்றத்தின் இசை நாடக நூல் இறுவெட்டின் வெளியீட்டு விழா அண்மையில் கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. பேராயர் அதிவண. எஸ். ஜெபநேசன் அடிகளார் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் காணலாம். கலைஞர் ம.தைரியநாதன் நூல், இறுவெட்டுகளைப் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளாரிடம் வழங்குவதை இரண்டாவது படத்தில் காணலாம்.
(படங்கள்: லக்ஸ்மன்)

## மானிப்பாய் மாணவர்களிடையே பொது அறிவுப் பரீட்சை

நவாலி,ஜூலை31

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையினர் அப்பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே உள்ளூராட்சி சேவை, பொது அறிவு தொடர்பான பரீட்சையொன்றினை இன்று நடத்தவுள்ளனர்.

பரீட்சைகள் யாவும் அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறுமென்று சபையின் செயலாளர் பு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார். (202-100)

## மக்கள் வங்கியின் 47ஆவது ஆண்டு நிறைவையொட்டி விவேகானந்தர் கண்காட்சி

மந்திகை,ஜூலை31

மக்கள் வங்கியின் 47ஆவது ஆண்டு விழாவையொட்டிப் பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளையில் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஓவிய, நூல் கண்காட்சியொன்று நடைபெற்றது.

பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சிவநேசன் தலைமையில் இக்கண்காட்சி ஆரம்பவிழா நடைபெற்றது.

சுவாமி சித்ரூபானந்தாவின் ஆசியுடன் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கண்காட்சியை நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

இக்கண்காட்சி ஆரம்பவிழாவில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம், வைத்திய கலாநிதி கே.மயிலேறும் பெருமாள், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், மக்கள் வங்கி வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் கே. ஆனந்தராஜா, நெல்லியடி மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சிவஞானசுந்தரம் பிள்ளை, பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் பி.ஆனந்தநடேசன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (203-218)

## பாடசாலை அதிபரின் சங்கிலி அபகரிப்பு

தொல்புரம்,ஜூலை31

பாடசாலை அதிபரின் தங்கச்சங்கிலி பாடசாலைக்கு அண்மையாக வைத்து இனந்தெரியாதோரால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபரின் சங்கிலியே இவ்வாறு அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பாக அதிபர் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (202-119)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## தென்மராட்சியில் முன்பள்ளிகளுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூலை31

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தினால் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆறு முன்பள்ளிகளுக்குத் தளபாடங்கள் வழங்கப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை முன்பள்ளியில் வைத்து முன்பள்ளி ஆசிரியர்களிடம் தளபாடங்கள் வழங்கப்பட்டன.

கொடிகாமம் வள்ளுவர் முன்பள்ளி, கொடிகாமம் மத்தி முன்பள்ளி, மந்துவில் வுக்மன் முன்பள்ளி, மட்டுவில் வடக்கு ஞானதீபம் முன்பள்ளி, மட்டுவில் கிழக்கு சபீனா முன்பள்ளி, அறிவொளி முன்பள்ளி ஆகியவற்றுக்கே தளபாடங்கள் வழங்கப்பட்டன. (203-207)

## குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு வேலணையில் 3 கிணறுகளைப் புனரமைக்க வேண்டும்

### உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை31

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு அங்குள்ள 3 பொதுக்கிணறுகள் புனரமைப்புச் செய்யப்படவேண்டும். இதற்கென பிரதேச சபை திட்டங்களை முன்வைக்க வேண்டும்.

இவ்வாறு வேலணை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தி.மீரா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

தீவகப் பிரதேசத்தில் மக்களின் குடிதண்ணீர் தேவை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. எனினும் அதனைப் பூர்த்தி செய்வதற்கு இங்கு தண்ணீர் பெரும் பற்றாக்குறை உள்ளது.

சாட்டியில் உள்ள இரு கிணறுகள் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினால் மீள் புனரமைப்பு செய்யப்படுகின்றது. இங்கு மேலும் 3 கிணறுகள் 50 வருடங்களாக புனரமைப்பின்றிக் கிடக்கின்றன. இவற்றைப் புனரமைப்பதன் மூலம் பிரதேச மக்களினதும் அயல் பிரதேச மக்களினதும் குடிதண்ணீர் பிரச்சினையை ஓரளவு தீர்க்கமுடியும்.

எனவே இக் கிணறுகளைப் புனரமைப்பதற்கான திட்டங்களை பிரதேச சபை முன்வைக்க வேண்டும் - என்றார். (202-95)

## மாநகர சபைப் பகுதியில் நீர்க்குழாய்கள் பழுது; பெருமளவு தண்ணீர் விரயமாகின்றது

நாவற்குழி,ஜூலை31

யாழ்.மாநகர சபையின் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தில் பல நீர்க்குழாய்கள் பழுதடைந்துள்ளன. இதனால் பெருமளவு தண்ணீர் வீண்விரயமாவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சில இடங்களில் பொதுமக்கள் தமக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளமுடியாது திண்டாடுகின்றனர்.

கச்சேரி காட்டுக் கந்தோர் வீதி, கொழும்புத்துறை, குருநகர் ஆகிய இடங்களில் நீர்க்குழாய்கள் பழுதடைந்ததால் குடிதண்ணீர் விரயமாகிறது. மாநகர சபையின் நீர் விநியோகப் பிரிவினர் இக்குழாய்களைத் திருத்த நடவடிக்கை எடுக்கவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (202-288)

## 2009ஆம் ஆண்டிற்கான இடமாற்றத்திற்கு வடமாகாண ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை31

வடமாகாணத்தில் பணியாற்றும் ஆசிரியர்களில் 2009ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வலயத்திற்குள்ளான இடமாற்றம், வலயங்களுக்கிடையிலான இடமாற்றங்கள் (மாவட்டத்திற்குள்), மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்றங்கள், மாகாணங்களுக்கு இடையிலான இடமாற்றங்கள் ஆகியவற்றுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

* கஷ்டப் பிரதேசங்களில் நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாக சேவையாற்றிய ஆசிரியர்கள்.
* வசதியான பிரதேசத்தில் 6 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றியவர்கள்.
* விசேட வைத்திய காரணங்களுக்காக இடமாற்றம் கோருவோர்.
* கணவன்/மனைவி வடக்கு மாகாணத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தால் கணவன்/மனைவி ஒன்றாக இணைந்து வாழவேண்டிய அவசியத் தேவை ஏற்படுபவர்கள்.

ஆகியோர் இந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்காலிக இணைப்புப் பெற்றவர்களும் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். (202-207)

## அறவழி நிலையத்தின் பயிற்சியாளர்களுக்கு சைக்கிள்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை31

அறவழி நிலையத்தின் வல்வெட்டி தொழில் பயிற்சி மையத்தில் பயிற்சியில் பங்குபற்றும் யுவதிகளுக்கு அண்மையில் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

பயிற்சிநெறியில் பங்குபற்றும் யுவதிகளின் போக்குவரத்து நலன்கருதி சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத்தினர் இந்த சைக்கிள்களை வழங்கியிருந்தனர்.

சைக்கிள்களை சம்பிரதாயபூர்வமாக வழங்கும் நிகழ்வில் மக்கள் வங்கி வல்வெட்டித்துறைக் கிளைமுகாமையாளர் பீ.கிருஷ்ணானந்தன், 'வூஸ்க்' நிறுவன சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட அலுவலர் ஏ. எடின் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (202-207)

## மானிப்பாய் வைத்தியசாலையில் கட்டடப் பணிகள் பூர்த்தி

நவாலி,ஜூலை31

ஆனைக்கோட்டையில் அமைக்கப்பட்டு வந்த மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையின் கட்டடப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

இவ் வைத்தியசாலையின் திறப்புவிழா விரைவில் நடைபெறவுள்ளது என வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் தெரிவித்தனர். (202-100)


உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

"யுனிலங்காஸ்" நாட்காட்டி. 32,சென் அன்ரனிஸ் மாவத்தை, கொழும்பு – 13

இணைந்து நடத்தும்!!

வெற்றித் தேர்வு மாபெரும் கருத்தரங்கு – 2008

வெற்றித்தேர்வு திருமலை.எஸ்.கணேசலிங்கம். அவர்களின்

(ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், திருகோணமலை)

இம்முறை தரம்:5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான விசேட செயலமர்வும், கருத்தரங்கும்.

கலந்துகொள்ளும் வளவாளர்கள்:

திரு.எஸ்.கணேசலிங்கம். (உதவிக்கல்விப்பணிப்பாளர், திருகோணமலை)
கலாநிதி செ.திருநாவுக்கரசு (சிரேஸ்ட விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
திரு.நா.சுவாமிநாதன (முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர், விரிவுரையாளர)
திரு.சரா.புவனேஸ்வரன (விரிவுரையாளர்)
திரு.கே.தவயோகராசா (யாழ்.முன்னணி ஆசிரியர், சாவ.இந்து.ஆர. பாடசாலை)

| செயலமர்வு நடைபெறும் இடங்கள் | காலம் |
| --- | --- |
| இளங்கலைஞர் மன்றம் சட்டநாதர் வீதி, நல்லூர் | 02.08.2008 சனி காலை 8.30 முதல் 2.30 வரை |
| துரைஜயா மண்டபம் நவாலி வீதி, ஆனைக்கோட்டை | 03.08.2008 ஞாயிறு காலை 8.30 முதல் 2.30 வரை |
| வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை மண்டபம், மாலுசந்தி, நெல்லியடி | 04.08.2008 திங்கள் காலை 8.30 முதல் 2.30 வரை |

பேருந்து ஒழுங்கு தேவைப்படும் பாடசாலைகள் 021 222 2877

செயலமர்வின்போது மாவட்டநிலை 30 முதன்மை மாணவர்களுக்கு உதயன் மெச்சி வழங்கும் பரிசும், பெறுமதிமிக்க சான்றிதழும் உங்களுக்காக

அனுமதி அட்டைகளை சகல புத்தகசாலைகளிலும் இன்று பெற்றுக்கொள்ளலாம். வெற்றித்தேர்வு பெறும்பாடசாலைகள். உடன் இவ்விலக்கத்துடன் தொடர்புகொள்க.

யாழ்.மாவட்டம்: 0212229016 0773126807 | வடமராட்சி: 02122638...

மாதிரி வினாத்தாள், கையேடு, செய்முறைப்பத்திரம் என்பன வழங்கப்படும். கையேடு வெளியில் பெறமுடியாது. இதுவரை நடைபெற்ற வெற்றித்தேர்வு பரீட்சை வினாப்பத்திரங்கள் நுழைவாயிலில் பெறமுடியும்.


## மனிதனின் 'அகங்கார வியாதி'யே கொடியது

உனது எண்ணங்கள், உணர்ச்சிகள் இவற்றின் அடிப்படையில் இறைவன் செயல்படுவார் என்று நாம் எதிர்பார்க்கலாகாது. குடும்பம், நாடு, உலகம் இவற்றின் தேவைகளைப் பற்றி இறைவன் முழுவதும் அறிவார். ஒவ்வொன்றிற்கும் உரிய பயன்களைச் சரியான நேரத்தில் முறையாக வழங்குவார்.

சிலருக்கு நற்பயனாக இருக்கும் இயற்கையின் பரிசில், வேறு சிலருக்கு நற்பயனாக அமையாது என்பதற்கு ஓர் உதாரணம். திருமண விழா ஒரு வீட்டில் நடைபெற இருக்கும் நேரத்தில், மழை நிற்கவேண்டுமென்று குடும்பத்தினர் பிரார்த்திக்கின்றனர். அதேசமயம், வறண்டிருக்கும் விளைச்சல் நிலம் கொண்ட ஒரு விவசாயி, தினம் விளைச்சலுக்கு ஏற்றதாக மாறும் வகையில் மழை கொட்டவேண்டும் என்று பிரார்த்திக்கின்றான். இறைவன் பாரபட்சமற்றவர். ஒரு குறிப்பிட்ட நபருக்கான வேண்டுகோளுக்கு மட்டும் இணங்கி நியாயம் தவறுவதில்லை. அனைவரின் தேவைகளையும் சீர்தூக்கி, சமநிலையில் இருந்து தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்.



பொதுவாக மக்கள் அனைவருமே தீராத வியாதியொன்றால் பீடிக்கப்பட்டு இருக்கின்றனர். சிலருக்கு அது குறைவாகவும், வேறு சிலருக்கு அது மிகவும் கடுமையாகவும் இருக்கும். வியாதி அனைவருக்கும் ஒன்றே. ஆனால் கடுமையில் வேறுபாடுகள் உள்ளன. மிக அனுபவம் நிறைந்த மருத்துவர்களால் கொடுக்கப்படும் மிகச்சிறந்த மருத்துவ சிகிச்சையும் இந்த வியாதியைக் குணப்படுத்த இயலாது. அதுவே 'அகங்காரம்' என்ற வியாதி.

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் அறிவுசார் பொருளாதார மேம்பாட்டிற்கு தொழில் ரீதியான கல்வி புகட்டப்படுதல் காலத்தின் தேவை

## பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வலியுறுத்துகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை31

எமது பிள்ளைகளிடையே அறிவுசார் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டு



மாயின் மூன்றாம் நிலைக் கல்வியோடு தொழில் ரீதியான கல்வியையும் புகட்ட வேண்டும். இதற்கு எம்மிடம் உள்ள ஆசிரியவளங்களை சரிவர - நிறை வாகப் பயன்படுத் திக் கொள்ள வேண்டும். இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பால சுந்தரம்பிள்ளை கருத்துத் தெரிவித்தார்.

காரைநகர் அபிவிருத்திச் சபை கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் இந்துக் கல்லூரியில் நடத்திய கல்வித்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே பேராசிரியர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

இன்று உயர்கல்வி அடிப்படைத் தேவையாக உள்ளது. அன்றைய காலத்தில் படித்தவர்கள் என்றால் ஐந்தாம் வகுப்பை பெருமையாகச் சொல்வார்கள். ஆனால் இன்று படித்துவிட்டு இருக்கிறார்கள் எனில் பட்டதாரி தொடர்ந்து படிக்கவில்லை எனப் பெற்றோர் குறை கூறுவது முதுகலைமாணி அல்லது அதற்குமேல் என்ற நிலை உருவாகி உள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் ஆசிரியவாண்மை குறைவாகக் காணப்பட்டது. நான்கு மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை படிப்படியாகக் குறைந்து நாற்பது மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை அமைந்திருந்தது. இன்று பல்கலைக் கழகங்களில் சிறப்புத் தரங்களில் சித்தி பெற்ற பட்டதாரிகளும் கல்வியியல் கல்லூரிகளில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்களும் ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டதால் யாழ்.மாவட்டத்தில் பதினாறு மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை தோன்றியுள்ளது. இதனால் மாணவர்களின் கல்வியில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றக்கூடிய இளையவர்கள் கல்வியியல் புலத்தில் இணைந்திருப்பது யாழ்ப்பாண கல்விநிலை உயர்வடைவதற்கு வாய்ப்பு அதிகரித்துள்ளது. இதனால் ஆசிரியவளம் குடாநாட்டில் விரயமாக்கப்படாமல் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

இன்று குடாநாட்டில் மீன்பிடி, கைத்தொழில், போக்குவரத்து எனப் பல துறைகளிலும் பின்னடைவே காணப்படுகின்றது. ஆனால் பாடசாலைகள் புதுப் பொலிவு பெற்று கல்வியில் உயர்வடைகின்ற நேரத்தில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைகின்றது. இதற்கு பெற்றோரிடையே ஈடுபா டும் விழிப்புணர்வும் குறைவாக உள்ளமையே காரணம்.

கல்வி பின்னடைவிற்கு காரணம் பெற்றோர் பிள்ளைகளின் கல்வியில் கரிசனை இல்லாமையே. கல்வியில் பிள்ளைகளுக்கு சரியாக வழிகாட்டிக் கொண்டிருந்தால் அவர்களைக் கல் வியில் உயர்த்த முடி யும்.

இந்த ஊர்ப் பிள்ளைகளுக்கு சுயநம்பிக்கை நிறைய உண்டு. அவர்களை ஊக்கப்படுத்தினால் நிறையச் சாதிக்க முடியும். கல்வியில் காரைநகர் முன்னோடியாகத் திகழ்கின்றது. பல பேராசிரியர்களையும், கல்வியாளர்களையும் உருவாக்கிய பிரதேசம் காரை நகர்ப் பிரதேசம்.

இலங்கையிலேயே பல்கலைக்கழகத்தில் தொடர்ச்சியாக கல்வியாளராக காரை நகரைச் சேர்ந்த பேராசிரியர் தர்ம ரட்ணம் இருந்து வருகின்றார். 1958 மே 30 இல் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளராக இணைந்து இன்றுவரை கல்விப் பணி புரிந்து வருகின்றார். எங்கள் பெருமைகள் எங்களுக்கு உற்சாகமூட்டுவனவாக அமைகின்றன. கல்விப் பணியில் சிறந்த பின்புலத்தைக் கொண்ட வர்கள் காரைநகர் மக்கள். இதில் மேலும் மேலும் வளரவேண்டும்.

காரைநகரின் உள்ளகவளம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டது. நெற்செய்கையை விட வேறு வருமானம் இல்லை. மீன்பிடித் தொழில் சொற்பமே. எனவே தொழில் செய்வதற்கு வெளியிடம் செல்லவேண்டிய தேவை உள்ளது. இதனால் பரந்துபட்ட அறிவைப் பெறுவதற்கு கல்வி அவசியம் - என்றார்.

இந்நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வாழ்நாள் பேராசிரியர் வே.தர்மரட்ணம் தம்பதியினர், காரைநகர் உதவி அரச அதிபர் த.ஜெயசீலன், தீவகவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேஸ்வரன் ஆகியோரும் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (202-250)

## நயினாதீவில் நிறைகுறைந்த பிள்ளைகளுக்கு போஷாக்குணவு

யாழ்ப்பாணம், ஜூலை31

நயினாதீவில் நிறைகுறைந்த 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போஷாக் குணவு வழங்கப்பட்டுள்ளது.

நயினாதீவு பொதுச்சுகாதார பரிசோதகர் எஸ்.கடம்பரூபன் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்:

நயினாதீவில் நிறைகுறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை கூடுதலாக அவதானிக்கப்பட்டுள்ளது. தற்போது 20 பிள்ளைகளுக்கு இரண்டு தடவைகள் ஜீவாகாரம், கடலை, பயறு என்பன வழங்கியுள்ளோம் - என்றார். (202-95)

## முன்பள்ளித் தொண்டர்களுக்கு தென்மராட்சியில் சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், ஜூலை31

தென்மராட்சிப் பிரதேசத்தில் முன்பள்ளித் தொண்டர்களாக பணிபுரியும் 12 யுவதிகளுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

**போரூட் நிறுவனத்தினர் மிதிவண்டிகளை அந்தந்த உள்ளூராட்சி சபைகள் ஊடாக தொண்டர்களுக்கு வழங்கினர்.**

சாவகச்சேரி பிரதேச சபையில் ஒன்பது தொண்டர்களுக்கும் சாவகச்சேரி நகரசபையில் மூன்று தொண்டர்களுக்கும் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் முன்பள்ளித் தொண்டர்கள் மூவருக்கான சைக்கிள்களை கையளித்தார்.

போரூட் நிறுவனத்தினால் முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தினை ஆரம்பித்துள்ளதால் அதனை நடை முறைப்படுத்தும் பணியில் தொண்டர்கள் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(203-207)

## வட்டு. கண்ணகி ஆலய ஆடிப்பூர சங்காபிசேகம்

யாழ்ப்பாணம், ஜூலை31

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலய ஆடிப்பூர மகா சங்காபிசேகம் எதிர்வரும் திங்கட் கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 7 மணி தொடக்கம் சங்குப் பூசை, விசேட ஹோமம் என்பன இடம் பெற்று 9.30 மணியளவில் சங்காபிசேகம் இடம்பெறும்.

மாலை 4.30மணியளவில் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல் நடைபெறும். தொடர்ந்து பூந்தண்டிகையில் சுவாமி வீதியுலா வருவார்.

(203)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வட்டுக்கோட்டை வடக்கு, கொத்தன்வளவு
அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானம்
எமது ஆலய புனரமைப்புக்கு நிதி உதவி வழங்கிய வடமாகாண விசேட செயலணித் தலைவரும், சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலதிபருமான
**திரு.க.ந.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும் வலி-மேற்கு ஈ.ம.ஜ.க. அமைப்பாளர்
திரு.வே.வள்ளுவன் அவர்களையும் எமது ஆலய பரிபாலனசபையும் வழிபடுவோரும் பாராட்டி நன்றி தெரிவித்து வாழ்த்துகிறோம்.
**ஆலய பரிபாலன சபையும் வழிபடுவோரும்.**



## நகராட்சிமன்றம் பருத்தித்துறை கேள்வி அறிவித்தல்

பருத்தித்துறை நகராட்சிமன்றத்திற்குச் சொந்தமான கீழ்வரும் விவரங்களைக் கொண்ட உழவு இயந்திரம் பகிரங்க கேள்வி மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. ஆகக் குறைந்த கேள்வித் தொகை வற் உட்பட ரூபா 300000.00 ஆகும். கீழ்க் குறிப்பிடப்படும் கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் அலுவலக நேரத்தில் செலுத்திக் கேள்விப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

01.கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி:
25.07.2008 - 12.08.2008 பி.ப.3 மணிவரை
02.கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:
15.08.2008 மு.ப.10 மணிவரை
03.கேள்வி திறக்கப்படும் திகதி: 15.08.2008 ந.ப.12 மணிக்கு
(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
05.பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்தினை அரக்கு முத்திரை இடப்பட்ட கடித உறையிலிட்டு செயலாளர், நகராட்சிமன்றம், பருத்தித்துறை என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமோ 2ஆம் பந்தியில் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
06. கேள்வி சமர்ப்பிக்க விரும்புவோர் மேலதிக நிபந்தனைகளை சபைக் காரியாலயத்தில் பெறுவதுடன், வாகனத்தையும் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

| உழவுயந்திர விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற் வரி |
|---|---|---|---|
| பாவிக்கப்பட்ட 36-8226 இலக்க இழுபொறி இயந்திர விற்பனை | 5000.00 | 500.00 | 75.00 |

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
24.07.2008 (சி/553972)

அ.அ.நடராசா,
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.


# மத்திய கிழக்கிற்குப் பணிப்பெண்கள் செல்வதை நிறுத்த விசேட திட்டம்

## மேற்கு நாடுகளுக்கு அனுப்ப மாற்று ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 31

மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் புரியச் செல்லும் பணிப்பெண்களின் எண்ணிக்கையை ஐந்து வருடங்களுக்குள் கணிசமான அளவு குறைத்துவிடத் திட்டமிடப்பட்டிருப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்தது.

அதற்கு மாற்றீடாக நன்கு பயிற்றப்பட்ட ஆண், பெண் தொழிலாளர்களை கனடா, ஆஸி. போன்ற மேற்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புகளுக்காக அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பணியகம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறை ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்கவே மேற்படி தகவலைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கை நாட்டவர்கள் தற்போது மத்திய கிழக்கு நாடுகளுக்கே தொழில் தேடிச் செல்கின்றனர். அங்கு செல்கின்ற வீட்டுப் பணிப் பெண்கள் அதிக துன்பங்களை எதிர்நோக்குகின்றனர்.

அவர்கள் வேலை செய்யும் வீடுகளில் நடக்கும் கொடுமைகள் வெளியில் வருவதில்லை. பிரச்சினைகளுக்குள்ளாகும் அதிகமான பணிப்பெண்கள் தினமும் அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் தஞ்சம் புகுகின்றனர்.

இந்த நிலையைத் தடுத்து நிறுத்தி பயிற்றப்பட்ட ஆண், பெண் தொழிலாளர்களை மேற்கத்தைய நாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் அத் தொழிலாளர்கள் நல்ல நிலையை அடைவர்.

அதன் அடிப்படையில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கையை ஐந்து வருடங்களுக்குள் குறைத்து விட நாம் தீர்மானித்திருக்கிறோம்.

மாறாக பயிற்றப்பட்ட தொழிலாளர்களை மேற்கத்தேய நாடுகளுக்கு அனுப்ப முடிவு செய்துள்ளோம். கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் அதிகளவு வேலைவாய்ப்புகள் உள்ளன. இது தொடர்பாக நாம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம் - என்றார். (சி)


## கண்ணீர் அஞ்சலி

எமது நிதியத்தின் ஆரம்பகால உறுப்பினரும் ஆலோசனைக்குழு உறுப்பினருமான முன்னாள் செயலாளருமாகிய
திருமதி பராசக்தி சந்திரசேகரியின் ஏக புதல்வன்
**ச.முருகதாஸ்** (பொறியியலாளர் - லண்டன்)
அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம், இணுவில்.**
(சி/553973)



*மாநகரசபை - யாழ்ப்பாணம்*

## சுத்திகரிப்பு வேலைகளுக்குத் தேவையான பெரிய நார்க்கடகங்கள் விநியோகம் செய்வதற்கான கூறுவிலை அறிவித்தல்

எமது சபையின் சுத்திகரிப்பு வேலைக்குத் தேவையான 1¼' உயரம், 2½' விட்டம் கொண்ட பெரிய நார்க்கடகம் தேவையாக உள்ளது. இதனை செய்து வழங்குபவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. (படிப்படியாக அவற்றினை வழங்கலாம்)

மேற்படி அளவினதாக கடகம் ஒன்றின் விலையைக் குறிப்பிட்டு, எதிர்வரும் 10.08.2008ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக இடதுபக்க மேல் மூலையில் "நார்க்கடகத்திற்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு, மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
29.07.2008 (சி/553968)

ம.செ.சரவணபவ,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.



## விற்பனைக்கு

NPMK இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள Hero Honda CD Down உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 3216
No: 289, பலாலி வீதி, திருநெல்வேலி.



## தேவை

எமது யாழ்.நகர விற்பனை நிலையத்திற்கு இன்ரநெட், ஈமெயில் Accounting செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை. (விற்பனைத்துறையில் விருப்பமுள்ளோர் விரும்பத்தக்கது) திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.
**SATS - TECH ENGINEERS**
No: 11/10B, Stanly Road, Jaffna - ph.:021 222 8812
(76794)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின் பற்றாக்குறையால் திண்டாடும் யாழ்.மாவட்டப் பாடசாலைகள்

பவித்திரன்

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கான பற்றாக் குறை பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

ஆரம்பக் கல்வியென்பது மிகவும் அத்தியாவசியமானதாகும். ஆரம்பத்தில் ஊட்டப்படும் கல்வி உரியமுறையில் நன்கு திட்டமிடப்பட்டு புகட்டப்படவேண்டும் என்பதனைக் கல்வித் திணைக்களம் முதல் பெற்றோர்கள், கல்வியியலாளர்கள் என அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எனவேதான் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் பற்றாக்குறை பற்றியும் ஆரம்பக் கல்வியைச் சில ஆசிரியர்கள் பொழுது போக்காகக் கற்பித்து வரும் நிலைமையும், அதற்குக் கல்வி அதிகாரிகள் உடந்தையாக இருந்து வருகின்றமையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இன்று இளைய தலைமுறையொன்று தறிகெட்டு நிற்கின்றது. மூத்த தலைமுறைக்கு மதிப்பளிப்பதில்லை. கலாசாரப் பிறழ்வுகளுக்கு உள்ளாகின்றது. அடாவடித்தனம் புரிகின்றது.

மறுபுறத்தே தொடர்ந்து நிகழ்ந்து வரும் போரினைக் காரணம் கூறி தப்பித்துக் கொள்ள முனைவதும் கூட வேடிக்கையான விடயம் என்றே கூறவேண்டும்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னிப் பெருநிலப்பரப்பில் மாணவர்களின் உளத்தாக்கம் சம்பந்தமாகக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

அங்கு இளைய தலைமுறையினர் குண்டுவீச்சு, துப்பாக்கிச் சூடு என்பவற்றிற்கேற்பத் தம்மை இசைவாக்கிக் கொண்டு, தமது வாழ்க் கையைத் தொடர்கிறார்கள் என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே சண்டை என்பது வெறுமனே கடமையைச் சரிவரச் செய்யாமைக்கும் பொறுப்பற்ற தன்மைக்கும் ஒரு சாட்டேயன்றிப் போரானது எமது வாழ்வை முழுமையாகப் பாதிக்கின்றது என்பது தவறான ஒரு கருத்தாகும்.

அந்த வகையில் தான் இன்று ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வி நிலைமையிற் காணப்படும் குறைபாடுகளையும் கூறலாம்.

ஆரம்பப் பிரிவுக்கு தகுதிவாய்ந்த ஆசிரியர்களையே நியமனம் செய்ய வேண்டும். வெறுமனே மாணவர்களின் எண்ணிக்கையை மட்டும் கணக்கிலெடுத்து ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவதைத் தவிர்த்து பாடசாலையொன்றில் வெற்றிடமாகவுள்ள பாடநெறிகளுக்குப் பொருத்தமானவர்கள் நியமனம் செய்யப்படவேண்டும்.

குறிப்பாக இந்த நியமனங்கள் ஆரம்பப் பிரிவு வகுப்புகள் விடயத்தில் மிகவும் கவனமாகவும் அக்கறையாகவும் செய்யப்பட வேண்டும். சாதாரணமாக ஒரு வீட்டிலே கூட இரவு வேளைகளில் பிள்ளைகளுக்குப் பாடங்களைப் பெற்றோர் கற்பிப்பதற்கு படாத பாடு படுகின்றனர்.

ஒவ்வொரு பிள்ளையும், ஒவ்வொரு கோணத்தில் ஒவ்வொரு விடயத்தைக் கேட்பதும், குழப்புவதும் என்ற நிலை ஏற்படும். இந்த வகையில் பல்வேறு குடும்பச் சூழல்களில் இருந்துவரும் பிள்ளைகளை ஒரே இடத்தில் வைத்துக் கல்வி கற்பிப்பது என்பது எந்தளவு சுமையானது என்பதை உணர




வேண்டும்.

சில மாணவர்கள் ஏனைய பிள்ளைகளிடம் உள்ளது தன்னிடம் இல்லை என்பன போன்ற தாழ்வு சிக்கல்கள் குழுநிலை செயற்பாட்டுக்கு முகங்கொடுக்க முடியாமை என்னும் பிரச்சினைக்கும் உள்ளாகின்றார்கள்.

இதனால் குழப்பம், ஒதுங்கி இருத்தல் கோபப்படல், அழுகை, சிறிய பொருள்களை உடைத்தல், சண்டை பிடித்தல் எனப் பல விளைவுகளுக்கு வித்திட்டு ஒரு நெருக்கடியான சூழ்நிலைக்குள் பிள்ளைகளை இட்டுச் செல்கின்றது. நாளடைவில் பிள்ளைகள் பாடசாலையை வெறுக்கும் நிலைமையும் ஏற்படுகின்றது.

சிறுவயதில் அடக்கிய உணர்வுகள் கட்டிளமைப் பருவத்தில் எழுந்த பலவிதமான உளச்சிக்கல்களையும், நடத்தை மாற்றங்களையும் ஏற்படுத்துகின்றது.

ஆரம்பப் பிரிவுப் பாடசாலை பலவற்றில் தரம் ஐந்து வரை மட்டுமே காணப்படுகின்றன. இங்கு பிள்ளைகள் சுமார் 50 பேர் வரை காணப்பட்டால் இரண்டு அல்லது மூன்று ஆசிரியர்களே போதனையில் ஈடுபடுகின்றனர்.

இந்த இரண்டு, மூன்று ஆசிரியர்களும் வகுப்புகளை ஒன்றிணைத்துக் கற்பிக்கவேண்டிய நிலையே காணப்படுகின்றது.

இந்தக் கல்வி முறைமை வெற்றியளிக்குமா? என்றால் இல்லையென்றே குறிப்பிடலாம். கிராமப் புறங்களில் பல நூற்றுக் கணக்கான பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் சீராகச் செல்லாத நிலைமையும் காணப்படுகின்றது.

பெற்றோர்களிடம் பிள்ளைகள் பாடசா

## தேவைக்கேற்ற ஆசிரியர் நியமனங்கள் இல்லாமையால் மாணவர்களின் கல்விச் செயற்பாடு பாதிப்படைகிறது

லைக்கு ஏன் செல்லவில்லையென்றால், "இன்று ஆசிரியை மற்ற வகுப்புக்கு படிப்பிப்பார். இவர்களை வெயிலில் விளையாட விடுவார்கள், பாடம் நடக்கமாட்டாது கூடிய வகுப்புப் பிள்ளைகளுடன் வைத்துக் கற்பிக்கின்றார்கள். குறைந்த வகுப்புப் பிள்ளைகளுடன் வைத்துக் கற்பிக்கின்றார்கள்.

என்பவற்றுக்காகவே பாடசாலை செல்ல விடாமல் வீட்டில் பிள்ளைகளை நிறுத்தி வைத்திருப்பதாகத் தெரிவிக்கின்றார்கள்.

ஆசிரியர்களைக் கேட்டால் 'நாங்கள் என்ன செய்யமுடியும் இரண்டு வகுப்புகளை ஒரே நேரத்தில் நடத்துவது என்பது எந்தளவுக்குச் சாத்தியப்படும். ஒரு பிள்ளைக்கு ஒரு விடயத்தைச் சொல்லிக் கொடுத்துவிட்டு அடுத்த வகுப்பிற்குச் செல்வதற்கிடையில் மாணவர்கள் சத்தம் போட்டு அடிபட்டுக் கொள்கின்றார்கள்' என்று சலித்துக்கொள்கின்றார்கள்.

மறுபுறம் ஆரம்பப் பிரிவுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளவர்கள் உயர்தர மாணவர்களுக்குக் கற்பிக்கக்கூடிய பாடங்களைப் பயின்ற பட்டதாரிகளாகவும், வேறு பாடசாலைகளிலிருந்து தனிப்பட்ட பிரச்சினைகளில் இடமாற்றம் பெற்றுவந்த ஆசிரியர்களாகவுமே காணப்படுகின்றார்கள்.

சிறார்களின் தேவைகள் உணர்வுகள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. மாணவர்களின் ஆக்கங்கள் திறமைகள் வெளிப்படுத்தப்படுவதில்லை. மாணவர்கள் இந் நிலைகளால் கல்வியின் பால் வெறுப்பும் கோபமும் என்பவற்றைத் தமக்குள்ளே வளர்க்கத் தொடங்கி விடுகிறார்கள். இது அவர்களின் கற்றலில் பெரும் பின்விளைவுகளை ஏற்படுத்தும் அபாயத்தை உண்டுபண்ணி விடுகின்றது.

சில விடங்கள் அரச கொள்கைகள் என்றாலும் அதற்கு ஏற்ப தேவைகளை இனம் கண்டு பூர்த்தி செய்ய வேண்டிய கடப்பாடும் அவசியமும் உண்டு. ஆரம்பப் பிரிவுக்குத் தகுந்த ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை என்றால், நியமனம் செய்யப்படும் ஆசிரியர்களுக்காவது ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு எப்படிப் போதிப்பது என்பது தொடர்பான குறுகிய காலப் பயிற்சிகளையாவது வழங்க நடவடிக்கையெடுக்கவேண்டும்.

இதனைவிடுத்து வெறுமனே ஆசிரியர் - மாணவர்கள் என்ற நிலைமையே தொடர்ந் தும் காணப்பட்டால் நல்லதொரு சமு கத்தை எதிர்காலத்தில் உருவாக்குவது என்பது பெரும் கேள்விக்குறியதாகி விடும்.

*****************

# விழிப்புணர்வும், போதிய பயிற்சியுமிருந்தால் பேரனர்த்த ஆபத்துகளை இயன்றளவு தவிர்க்கலாம்

*அனர்த்தத்தின் போது செய்யக் கூடாதவை:*

✱ எரியும் இடத்தில் நிற்கக் கூடாது. வாயைத் திறந்தபடி செயற்படக் கூடாது.

✱ எவ்வித காரணம் கொண்டும் எரியும் பகுதிக்குள் உட்புகக் கூடாது.

✱ சொத்துக்கள், பொருள்களை எடுத்துக் கொண்டு ஓடக் கூடாது.

✱ மாடிகளில் இருப்பவர்கள் படிகளினூடாக வெளியேற வேண்டுமே தவிர மின் ஏற்றி இறக்கிகளைப் பயன்படுத்தக் கூடாது.

*பூமியதிர்ச்சி- சுனாமியின் போது; செய்யக்கூடியவை;*

✱ உயர்ந்த பிரதேசத்தை நோக்கிச் செல்லல்.

✱ பூமியதிர்ச்சி உடனடியாக ஏற்படும். சுனாமி வர நேரம் எடுக்கும். எனவே இது தொடர்பான அறிவுறுத்தல்களை முதலில் கடற்கரைப் பிரதேச மக்களுக்கு அறிவித்தல்.

✱ மாணவர் பாடசாலையில் இருக்கும்

**(இக்கட்டுரையின் முதலாவது பகுதி கடந்த 29 ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது)**

வேளையில் சுனாமி எச்சரிக்கை சம்பந்தமான வழிகாட்டலை அதிபர், ஆசிரியர் குழுவினர் வழங்குதல். வீட்டில் இருப்பின் அனைத்து உறுப்பினரும் வெளியேறல்.

✱ தொடர்ச்சியாக அரசாங்க அறிவுறுத்தல்களை வானொலி ஊடாக கேட்டு, அவதானித்து ஏனையவர் களுக்கும் தகவல்களைப் பரிமாற வேண்டும்.

✱ சுனாமியில் அகப்பட்டிருந்தால் மிதந்து வரும் ஏதாவது பொருளைக் கெட்டியாகப் பிடிக்க வேண்டும்.

*செய்யக்கூடாதவை:*

✱ கடலில் கப்பல், படகுகளில் இருக்கும் வேளை கரைக்குத் திரும்பக் கூடாது.

✱ கடற்கரை, ஆறு, நதிகளுக்கு அருகில் நிற்கக் கூடாது.

✱ வீணே விடுப்புப் பார்க்கக் கூடாது.

✱ பொருள்களை, உபகரணங்களை எடுத்துக் கொண்டு ஓடக் கூடாது.

இவ்வாறு ஒவ்வொரு அனர்த்தத்தின் போதும் செய்யக் கூடியது எது, செய்யக் கூடாதது எது என சிந்தித்துச் செயற்பட பயிற்சிகளையும், விழிப்புணர்வினையும் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. மேலும் இலங்கையில் தற்போது மின்னல் தாக்கங்களினாலும் அனர்த்தங்கள் ஏற்படுவது அதிகரித்து வருகின்றது. இதிலிருந்து பாதுகாக்க, மின்னல் ஏற்படும் போது இலத்திரனியல் சாதனங்களின் மின் இணைப்பை உடனடியாகத் துண்டிக்க வேண்டும். தொலைக்காட்சி உணர் கொம்புக்கும் - தொலைக் காட்சிக்குமிடையிலான தொடர்பைத் துண்டித்தல், தொலைபேசி பயன்படுத்துவதைத் தவிர்த்தல், உயர்ந்த மின் கம்பம், உலோகத்தினாலான பொருள்களுக்கு அருகில் இருப்பதைத் தவிர்த்தல், சைக்கிள், மற்றும் வளிமண்டல வெளியுடன் தொடர்புடைய வாகனப் பயணங்களை நிறுத்துதல் போன்ற செயன்முறைகள் அவசியமாகின்றன.




பா.தனபாலன்
உப பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி.

*குண்டு வெடிப்புக்கள்- யுத்த அனர்த்தம்*

எமது பிரதேசங்களில் போரினால் பெருமளவு மக்கள் உயிரிழந்தும் தமது அவயவங்களையும் இழந்துள்ளார்கள். அதுவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மிதி வெடிகள், கண்ணி வெடிகளினால் பெரும் அனர்த்தம் நிகழ்ந்து வருகின்றது.

இவை தொடர்பான விழிப்புணர்வு பல வகைகளில் மேற்கொள்ளப்பட்டாலும்,



தொடர்ந்தும் அனர்த்தங்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன. 'ஆபத்து எல்லை- அபாய வலயம்' போடப்பட்ட பிரதேசங்களில் மாணவர்களும், பொதுமக்களும் நடமாடுகின்றனர். அனர்த்தங்களுக்கு உள்ளாகுகின்றார்கள். இவற்றைத் தடுப்பதற்கு மேலும் பல செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன் 'இடர் அனர்த்த முகாமைத்துவம்' என்ற பொருளில், விஞ்ஞானம், சமூகக்கல்வி, சுகாதாரமும் உடற் கல்வியும் ஆகிய பாடத்துறைகளில், அடுத்த வருடத்தில் இருந்து புதிய பாட அலகுகள் இணைப்புப் பெறு கின்றன. எனவே இவ்விடயம் தொடர்பாக மேலும் தகவல்களைத் திரட்ட வேண்டியுள்ளது.

இலங்கையில் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரனர்த்தத்தின் பின்னரே, அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு அரசாங்க மட்டத்திலும், சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் ஏற்பட்டு வருகின்றது. 2005 ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ மனித உரிமைகள் தொடர்பான சட்டம் (இல130) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன், அதெற்கென ஒரு அமைச்சும் உருவாக்கப்பட்டு, இவ் அமைச்சு, மாவட்ட செயலர்கள், பிரதேச செயலர்கள், கிராம சேவையாளர்கள் மூலம் தகவல் தொடர்பாடல் மற்றும் அனர்த்த விழிப்புணர்வு செயலாற்றுகைகளை மேற் கொண்டு வருகின்றது. இதனது செயற்பாடுகளின் போதாமை காரணமாகவே கல்வியமைச்சு பாடசாலைகளினூடாக, அனர்த்த முகாமைத்துவ விழிப்புணர்வை மேற்கொண்டு வருகின்றது. ✱

## சுனாமித்தாக்கத்தின் பின்னரே இலங்கையில் அனர்த்த அபாய விழிப்புணர்வு பற்றி உணரப்பட்டுள்ளது

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முதலாவது பிறந்ததின வாழ்த்து

சுவிஸ்லாந்தில் வசிக்கும்
ஜெயேந்திரா - விஜிதா
தம்பதியினரின் செல்லப் புதல்வி கிஷானா
தனது முதலாவது பிறந்த நாளை இன்று
(31.07.2008) வியாழக்கிழமை சுவிஸில்
தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக்
கொண்டாடுகிறார். கிஷானாச் செல்லத்தை
அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா
மற்றும் மாமா (டோகா), பெரியன்ரா,
சின்னன்ரா மற்றும் உறவினர்கள், நண்பர்கள்
அனைவரும் இறைவன் ஆசியோடு
பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

*சின்னப்பு சுப்பிரமணியம் (தாத்தா),*
*(புகையிலை வியாபாரி).*
நிற்சாமம், சங்கானை மேற்கு.

# சேவை நலன் பாராட்டு விழா

**திரு.சண்முகம்**
**இராஜேஸ்வரன்**
(B.A, Dip. in Edu.S.L.T.S-I)

*கல்விப் பணியில்*
*24 வருடங்களாகச் சிறப்புடன்*
*சேவையாற்றி இன்று*
*ஓய்வுபெறும் எமது*
*வித்தியாலய ஆசிரியர், ஓய்வு*
*காலத்தில் சீருடனும்*
*சிறப்புடனும் பல்லாண்டு*
*வாழ வாழ்த்துகின்றோம்.*



அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
**சீதாலட்சுமி கதிர்காமு**

தோற்றம்
29.09.1927

மறைவு
01.07.2008

கடந்த 01.07.2008 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்ப ஒளிவிளக்கு அமரர் திருமதி சீதாலட்சுமி கதிர்காமு அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய நிகழ்வும் இன்று (31.07.2008) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன.

அத்தருணம் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*'இந்திரபவனம்',*
*கரணவாய் தெற்கு, கரவெட்டி.*

**குடும்பத்தினர்.**

# தரம் 5 மாணவர்களுக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 31

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி பிரதேச சபையினர் இக்கருத்தரங்கினை நடத்தவுள்ளனர்.

அண்மையில் இந்த மாணவர்களுக்கு நடத்தப்பட்ட புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சையில் 100 க்கும் மேற்பட்ட புள்ளிகள் பெற்ற மாணவர்களை கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம் கேட்டுள்ளார். (202-207)

## மணிவிழா நிகழ்வு

மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் வே.இராசதுரையின் மணிவிழா நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் ஆசிரியர் திருமதி உ.குலம் தலைமையில் நடைபெறவுள்ளது. (202-231)

## கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கென நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (202)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
27.09.1950

மறைவு
31.07.2007


அமரர்
**ஜேம்ஸ் பிரான்சிஸ் (பாக்கியம்)**

காற்றோடு நீ கலந்து இன்றோடு ஆண்டொன்று
நேற்றுவரை தேடி விட்டோம் எம்மிடம் நீ வரவில்லை
எவ்விடம் நீ சென்று விட்டாய் என்று தினம் ஏங்குகின்றோம்
பார்த்திருந்த பல பொழுதுகள் பலனின்றியே போனாலும்
வாழும் வரை உனை தினம் வாசலிலே எதிர்பார்த்திருப்போம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்.

*15/8, 5ஆம் குறுக்கு வீதி,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05.08.1945

மறைவு
23.07.2006

**அமரர் செல்லையா நடராஜா**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
*திதி: சதுர்த்தசி (31.07.2008)*

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் ஆறாத்துயரில்
கண்ணீர் சொரிய நின்று எப்போதும் உங்கள்
நினைவால் வாடுகின்றோம்.

*உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

தகவல்: **ந.புவனேஸ்வரி** *(மனைவி)*
**செ.கனகம்மா** *(அம்மா)*
**த.மகேஸ்வரி** *(தங்கை).*

*சக்கலாவத்தை,*
*கரணவாய் வடக்கு, கரவெட்டி.*

# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
06.12.1928

மறைவு
04.05.2008

**அமரர் தங்கம்மா இராமசாமி**

*கடந்த 04.05.2008 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் 90 ஆம் நாள் நினைவு இன்று (31.07.2008) வியாழக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

தகவல்: **ச.திரவியராசா** *(அதிபர்),*
*'மங்களகிரி',*
*பழைய உடையார் ஒழுங்கை,*
*பருத்தித்துறை.*

**குடும்பத்தினர்.**

புலமைப்பரிசில் திட்டம் 2008

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science, 4 Months, ~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science, 5 Months, ~~13,000~~ 2,600 | Diploma in Web page Designing, 4 Months, ~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Designing, 4 Months, ~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing, 4 Months, ~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering, 3 Months, ~~10,000~~ 2,000 |
| Diploma in AutoCAD, 3 Months, ~~10,000~~ 2,000 | Diploma in Microsoft Office, 3 Months, 1,500 | Accounting Package, 3 Months, ~~10,750~~ 2,150 |

80% OFF

மாணவர் நலன் கருதி Lab இணையும் இணைத்துள்ளது
வரையறையற்ற செய்முறைப்பயிற்சி
Multimedia Projector மூலமான விரிவுரைகள்

50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in multimedia | ~~5,500~~ | 2,750 |
| Diploma in Video Editing | ~~6,500~~ | 3,250 |

ஆரம்பம்:
01/08/2008 - 09 or 02
02/08/2008 - 09 or 01
03/08/2008 - 09 or 01
04/08/2008 - 09PM
06/08/2008 - 02PM

COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#167, KASTHURIYAR RD, JAFFNA. 021 222 8250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்திலும் சூரியகாந்தியை வெற்றிகரமாகப் பயிரிடலாமென நிரூபித்த சங்கானை ஓய்வூதியர்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சூரியகாந்தி எண்ணையை, தானே உற்பத்தி செய்தால் என்ன? என்ற ஆவலால் 5 பரப்புக் காணியில் சூரியகாந்தியை வளர்த்து வருகிறார் சங்கானை சிலம்புப் புளியடியைச் சேர்ந்த சண்முகம் பரஞ்சோதி (வயது 70) என்பவர். அவர் சங்கானை, விழிசுட்டி தம்பிரான் பிரிவுக் காணியில் இப்பயிர்ச்செய்கையை மேற்கொண்டுள்ளார்.

அவர் தம்முடைய முயற்சி பற்றிய கருத்துகளை 'உதயனுடன்' பகிர்ந்துகொண்டார்.

*கேள்வி:* நீங்கள் முழுநேரமாக ஒரு விவசாயியா?

*பதில்:* நான் பெருந்தெருக்கள் திணைக்களத்தில் ஓவசியராகக் கடமையாற்றி ஓய்வூதியம் பெற்று வருகிறேன். எனது மகன் விவசாயி ஆவார். அவருடன் இணைந்து நானும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளேன்.

*கேள்வி:* எத்தனையோ பயிர்வகைகள் இருக்கும்போது சூரியகாந்தியை மட்டும் ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்?

*பதில்:* எனக்கு 'கொலஸ்ரோல்' வியாதி இருக்கிறது.

## "என்னுடைய சுயதேவைக்காக மேற்கொண்ட சூரியகாந்திச் செய்கையை வியாபார ரீதியிலும் செய்யவுள்ளேன்"

இவ்வியாதிக்கு சூரியகாந்தி எண்ணெய் சிறந்தது என வைத்தியர்கள் அறிவுறுத்தினார்கள். இதற்காக இந்தியாவில் இருந்து இங்கு வருவிக்கப்படும் சூரியகாந்தி எண்ணெயை கடைகளில் வாங்கிப் பாவனை செய்தேன். ஆனால் அதன் விலை தற்போது ஒரு லீற்றர் ரூபா 700 வரை சென்றுவிட்டது. இதனால் இவ்வெண்ணெயை நானே தயாரித்தால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. இதே நேரம் இந்தியாவுக்குப் போகவேண்டிய ஒரு சந்தர்ப்பமும் கிடைத்தது. அங்கிருந்து வரும்போது சிறிதளவு சூரியகாந்தி விதைகளைக் கொண்டு வந்தேன். அவற்றை முதன்முறையாக விதைத்துள்ளேன்.

*கேள்வி:* இப்பயிர்ச்செய்கை பற்றிய முன் அனுபவம் உங்களுக்கு உண்டா?

*பதில்:* யாழ்ப்பாண மாவட்டத்தில் எவருமே இப்பயிர்ச்செய்கையை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இதனால் பயிர்ச்செய்கை முறைகளை எவரிடமும் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஏனைய பயிர்ச்செய்கையைப் போல இதனையும் செய்து பார்க்கலாம் என எண்ணித் தொடங்கியுள்ளேன். இந்திய தொலைக்காட்சி, வானொலிகளில் சில நேரங்களில் இப்பயிர்ச்செய்கையினைப் பற்றிய விவசாயப் போதனாசிரியர்கள் அளிக்கும் விளக்கங்களையும் அறிந்து, அதற்கேற்ப சூரியகாந்திச் செய்கையை மேற்கொண்டு வருகின்றேன்.

*கேள்வி:* மற்றைய பயிர்களைப் போன்றுதான் சூரியகாந்தியையும் பயிரிட்டுள்ளீர்களா?

*பதில்:* மிளகாய் மற்றும் மரவள்ளி நடும்போது வயலில் பாத்தி கட்டி, கயிறு பிடித்து குழிகள் தோண்டி நடுவார்கள். அதைப்போல் 1½ அடிக்கு ஒன்றாக 5 பரப்பிலும் குழிகள் தோண்டி (6'' பள்ளம்) அவற்றுள் இவ்விரண்டு விதைகளைப் போட்டு தொடங்கியிருந்தேன். இம்முறை சரியா? பிழையா? என எனக்குத் தெரியாது. ஆனால் தற்போது விதை முளைத்து, மரமாகி, பூப்பூத்த பின்தான் தெரிந்தது 1½அடி இடைவெளி போதாது என்று. ஆகக்குறைந்தது 2 அடி இடைவெளி ஒவ்வொரு மரத்திற்கும் இடையில் இருக்கவேண்டும். ஏனெனில் இம்மரம் கிளைவிட்டு வளரக்கூடியது. இடைவெளி குறைவால் சில மரங்கள் கிளை விடவில்லை.

*கேள்வி:* இம்மரம் எத்தனை மாதத்தில் பயிர்ச்செய்கைப் பலனைக் கொடுக்கும்?

*பதில்:* நான் வைகாசி மாதம் விதைத்திருந்தேன். ஆடிமாத ஆரம்பத்தில் பூக்கள் பூக்கத் தொடங்கிவிட்டன. இன்னும் இரண்டு மாதங்களில் பூக்களில் உள்ள விதைகள் முற்றும் என நினைக்கின்றேன்.

*கேள்வி:* ஒரு மரத்தில் இருந்து எத்தனை கிலோ விதையை எதிர்பார்க்கிறீர்கள்?

*பதில்:* அநேகமாக ஒரு மரத்தில் 15 முதல் 20 பூக்கள் வரை பூத்து காட்சியளிக்கிறது. கிட்டத்தட்ட ஒரு மரத்திலிருந்து ½முதல் ¾கிலோவரை விதையைப் பெறலாம்.



ஓய்வுபெற்ற ஓவசியர் சண்முகம் பரஞ்சோதி பயிர்ச்செய்கையின் பலனைப் பார்த்த பூரிப்பில், தனது பேரன், பேர்த்தியுடன் சூரியகாந்திப் பூக்களுடன் காணப்படுகிறார்.

*கேள்வி:* சூரியகாந்தியைப் பயிரிடுதலை வியாபார நோக்கில்தான் மேற்கொண்டுள்ளீர்களா?

*பதில்:* ஏற்கனவே கூறியவாறு எனது நோய்க்கான தேவையைக் கருத்திற்கொண்டே இதனை மேற்கொண்டேன். தற்போது மரங்களையும் பூக்களையும் கண்ணுற்றபோது வியாபார ரீதியில் மேற்கொள்ளலாம் என எண்ணியுள்ளேன். ஆனால் வியாபார நோக்கில் வெற்றியளிக்குமா என்பது தெரியவில்லை. ஏனெனில் சூரியகாந்தி எண்ணெயைப் பாவனை செய்யும் மக்கள் மிகக் குறைவானவர்களே யாழ்.மாவட்டத்திலே இருப்பார்கள். இதனால் வியாபார நோக்கில் வெற்றியளிக்குமா? என இனி வரும் காலத்தில்தான் அறியலாம்.

*கேள்வி:* சூரியகாந்தியைப் பயிரிடுவதனால் கிடைக்கும் நன்மைகள் பற்றிச் சொல்ல முடியுமா?

*பதில்:* மற்ற எண்ணெய் வகைகளை விட கொழுப்புச்சத்து அற்றது சூரியகாந்தி எண்ணெய் ஆகும். இந்திய மக்கள் அநேகர் சமையலுக்கு உபயோகப்படுத்தி வருகின்றனர். இலங்கையிலும் மக்கள் பாவனை செய்வார்களாயின் 'கொலஸ்ரோல்' போன்ற நோய்களின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

மேலும் பயிர்ச்செய்கை செலவும் குறைவு. பசளையாக இயற்கைப் பசளையையே போட்டுள்ளேன். நான் மாடு வளர்ப்பதால் எருவும், குப்பை கூழங்களையும் போட்டு, குறைந்த செலவில் மேற்கொண்டுள்ளேன். ஏனையோரும் இப்பயிர்ச்செய்கையை தோட்டப் பயிர்ச்செய்கையாக மேற்கொண்டால் வியாபார ரீதியில் இலாபத்தைப் பெறலாம் என நினைக்கின்றேன்.

**செவ்வி: மூ.சந்திரகுமார்**

என்க்கு இதுதான் சூரியகாந்திப் பயிர்ச்செய்கையின் ஆரம்பம். அறுவடை முடிந்ததும், தொடர்ந்தும் இப்பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவுள்ளேன். விவசாய சம்மேளனங்கள், கமநலசேவை நிலையங்கள், போதனாசிரியர்களைச் சந்தித்து, பயிர்ச்செய்கை முறை பற்றி விரிவாக இனிமேல் அறிந்து கொள்ளவுள்ளேன். இதுபற்றிய விவரங்களைப் பத்திரிகையில் பிரசுரிப்பதன் மூலம் ஏனையோரும் இப்பயிர்ச்செய்கையை மேற்கொள்ள ஏதுவாயிருக்கும் என அபிப்பிராயப்படுகிறேன்.

## சக சிப்பாயைச் சுட்டதாக சிப்பாய்க்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஜூலை31

சிப்பாய் ஒருவர் சக சிப்பாயை துப்பாக்கியால் சுட்ட சம்பவம் கடந்த திங்கட்கிழமை கிளாலிப் படைமுகாமில் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த பத்தினிகே குமார என்ற சிப்பாய் உடனடியாகக் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக மகே சத்துரங்க என்ற சம்பந்தப்பட்ட சிப்பாயை கொடிகாமம் பொலிஸார் கைது செய்து நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சிப்பாயை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (1-207)

## மட்டுவிலில் மென்பந்தாட்டம்

நாவற்குழி,ஜூலை31

மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக் கழகம், தென்மராட்சி ரீதியில் ஏழுபேர் கொண்ட - பன்னிரண்டு பந்து பரிமாற்றங்களைக் கொண்ட - மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றினை நடத்தவிருக்கின்றது.

இப்போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 2ஆம் திகதி. இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை சாவகச்சேரி கச்சாய் வீதியிலுள்ள சஜீத் படமாடத் திலும், மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்திலும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (1-288)

## சுழிபுரம் கிழக்கில் வீதிகள் புனரமைப்பு

தொல்புரம்,ஜூலை31

சுழிபுரம் கிழக்கில் 16 ஆண்டுகளாகத் திருத்தப்படாது சேதமடைந்திருந்த வீதிகள் தற்பொழுது புனரமைக்கப்பட்டுள்ளன.

கிராம மக்கள், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோரின் நிதியுதவியோடு இவ்வீதிகள் புனரமைக்கப்பட்டன.

இதுவரை காலமும் இவ்வீதிகள் சேதமடைந்திருந்ததால் போக்குவரத்துச் செய்வதில் பிரதேச மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். தற்போது வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளமையைப் பிரதேச மக்கள் பாராட்டுகின்றனர். (202-119)

# ஒலிம்பிக் நினைவுகள் 2

உலக ரசிகர்கள் போற்றும் ஒலிம்பிக் பந்தயம், 1896ஆம் ஆண்டு முதல் நவீன ஒலிம்பிக் போட்டியாக நடைபெற்று வருகிறது. ஆனால், பண்டைய காலத்திலும் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுள்ளன. அதில் பல சுவாரஸ்யங்கள் இருந்துள்ளன.

போட்டிக்கு முன்பு பன்றியைப் பலியிட்டு அதன் இரத்தத்தை தொட்டு நெற்றியில் வைத்த பின்னர் வீரர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்வது, பிறந்த மேனியுடன் போட்டியில் பங்கேற்பது போன்ற வித்தியாசமான நிகழ்வுகள் பண்டைய கால ஒலிம்பிக்கில் இருந்துள்ளன.

ஒலிம்பிக் பந்தயம் தொடங்கிய காலம் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். முதன் முதலாக தொடங்கிய ஒலிம்பிக் போட்டி கி.மு.1253ஆம் ஆண்டுக்கும் கி.மு. 884ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்திற்குள் இருக்கவேண்டும் என அவர்கள் கூறுகின்றனர். ஆனால், கி.மு.776ஆம் ஆண்டு நடந்த பந்தயத்தில் இருந்துதான் வரலாற்று ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தெரிகிறது.

**இன்னும் 8 நாள்களே எஞ்சியுள்ளன......**

கிரேக்க நாட்டிலுள்ள புனிதமான இடம் ஒலிம்பியா. அங்கு தோன்றிய விளையாட்டுகளைத்தான் ஒலிம்பிக் பந்தயங்கள் என்று அந்நாட்டு மக்கள் அழைத்துள்ளனர்.

கிரேக்க நாட்டில் கடவுள்களுக்கு பஞ்சம் இல்லை. வீரத்தில் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையை விட மதத்தில் ஆழ்ந்த பற்றும் அதிகமான நம்பிக்கையும் வைத்திருந்துள்ளனர். அவர்களின் தலைமைக் கடவுள் 'சியஸ்' (இந்துக்களின் சிவனைப் போன்றது). அக்கோயிலின் முன்னே அமைக்கப் பெற்ற விளையாட்டு அரங்கிலேதான் அத்தனை ஒலிம்பிக் பந்தயங்களும் நடந்தேறியுள்ளன.

ஒலிம்பிக் பந்தயம் என்றால் கிரேக்க நாட்டு மக்களுக்கு மிகவும் விருப்பம். பந்தயம் நடக்க இருக்கும் நாளுக்கு பல மாதங்களுக்கு முன்பே அவர்கள் தங்களை ஆயத்தம் செய்து கொண்டு விடுவார்கள்.

ஒலிம்பிக் போட்டிகளைப் பார்ப்பது புனிதமான இறைவன் ஆலயத்துக்குப் போய் வரும் மதச் சம்பிரதாயம் போன்று அவர்கள் எண்ணியுள்ளனர். போட்டிகள் ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான இடைப்பட்ட காலத்திலேயே நடந்துள்ளன. அப்போது மிகச் சில விளையாட்டுகளில் குறிப்பிடும்படியான நாடுகள் மட்டுமே பங்கேற்றுள்ளன. அதிலும் கிரேக்க மொழி பேசுபவர்கள் மட்டுமே விளையாட முடியும் என்ற நிலை இருந்துள்ளது. தற்போதுள்ள முறை மாதிரியல்லாமல் அனைத்து போட்டிகளும் கிரீஸில் உள்ள ஒலிம்பியாவிலேயே நடைபெற்றுள்ளன.

எங்கிருந்து ஒலிம்பிக் போட்டிகள் வந்தன?, ஒலிம்பியாவில் மட்டும் போட்டிகள் நடைபெறக் காரணம் என்ன?, யாரெல்லாம் பங்கேற்றார்கள்?, மகளிருக்கு போட்டிகள் இருந்ததா? போன்ற கேள்விகளுக்கெல்லாம் பண்டைய ஒலிம்பிக் போட்டிகளில் ஆதாரபூர்வமாக விடை காண முடியாதமை துரதிஷ்டவசமானதே. நாளை முதல் நவீன ஒலிம்பிக் போட்டிகளைப் பற்றிப் பார்ப்போம்.



கூடைப்பந்தாட்டத்தில் உள்ள ஒவ்வொரு வீரனின் கனவும் அமெரிக்காவில் உள்ள என்.பி.ஏ. தொழில்முறை வீரர்கள் போட்டியில் விளையாட வேண்டும் என்பதுவே.

1989இல் சர்வதேச கூடைப்பந்து சம்மேளனம் தனது விதிமுறைகளை மாற்றிக் கொண்டு, ரசிகர்களின் கனவை நிறைவேற்றும் 'கனவு அணி'க்கு ஒலிம்பிக் வாய்ப்பு அளித்தது.

பார்சிலோனாவில் 1992 இல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் நடந்த சம்பவம் இது.

பல்வேறு விளையாட்டுகளில் ஜொலிக்கும் ஜாம்பவான்களைப் பற்றிய கருத்துகளுக்கு அப்போது இடமில்லை. எங்கும் கனவு அணி குறித்த பேச்சே வலுத்திருந்தது. காரணம் என்.பி.ஏவில் உள்ள நட்சத்திர வீரர்கள் அனைவரும் முதன் முதலாக அணிவகுத்தமைதான்.

ஒட்டுமொத்த ஊடகங்களின் கவனமும் அவர்கள் மீது. பயிற்சியைக் கூட பக்கம் பக்கமாக எழுதினார்கள். ஜோன் ஸ்டாக்டன், ஸ்காட்டி பிப் பென்,கிளைடு டிரெக்ஸ்லர், டேவிட் ராபின்சன் இவர்கள் எல்லாம் என்.பி.ஏ. ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றவர்கள். ஆனால் அவர்களுக்கு முக்கிய அணியில் இடமில்லை.

விளையாடியவர்கள் நிச்சயம் அதைக் காட்டிலும் திறமைசாலிகளாக இருக்க வேண்டும். ஆம், 'கூடைப்பந்து அதிசயம்' மேஜிக் ஜோன்சன், லாரி பேர்டு, மைக்கேல் ஜோர்டன், சார்லஸ் பார்க்லி ஆகியோர் களத்தில் குதித்தனர்.

அவர்களது ஆட்டத்துக்கு முன்பு எதிரணிகள் அனைத்தும் சரண். அங்கோலாவுக்கு எதிரான முதல் லீக் ஆட்டத்தில் 116-48 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் அமெரிக்காவுக்கு வெற்றி. தான் எதிர்கொண்ட 8 அணிகளையும் தோற்கடித்து, தோற்கப்படாத அணியாக ஒலிம்பிக்கில் திகழ்ந்தது அது.

குரோஷியாவுக்கு எதிரான இறுதி ஆட்டத்தில் 32 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி. இதுவே எதிரணி ஒன்றின் குறைந்தபட்ச வித்தியாசத் தோல்வியாக இருந்தது. ஒவ்வொரு போட்டியிலும் சராசரியாக 43.8 புள்ளிகள் வித்தியாசத்தில் தோற்கடித்த கனவு அணியை யாராவது வேறு பெயர் கொண்டு அழைக்க முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/வேலணை வங்களாவடி
# அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவ சேனா சமேத முருகப் பெருமானின்
# தேர்த்திருவிழாச் சிறப்பு மலர் - 31.07.2008


## அருளாசிச் செய்தி



வேலணை வங்களாவடிப்பகுதியில் நீண்டகாலமாக எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் முருகப்பெருமான் இன்று தேரேறி அருட்காட்சி தருவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. பல ஆலயங்களைக் கொண்ட பிரதேசமாகிய வேலணையில் சைவசமய பாரம்பரியமும் தமிழ்ப்பண்பாடும் உள்ள மக்களும் ஆசாரசீலத்தோடு, சைவ மக்கள் வாழ்கின்ற வங்களாவடி முருகன் ஆலயம் பழமையும் பெருமையும் வாய்ந்த பண்பாட்டு ஆலயமாகும். புராண படிப்பு, பண்ணிசை ஓதல் இச்சிறப்பு நிகழ்ச்சிகளைக் கொண்ட முருக ஆலயத்தில் நீண்ட நாள்களுக்குப்பின் இன்று முருகன் தேரேறி அருளாசி வழங்குவது அனைவருக்கும் நன்மகிழ்ச் சியைத் தருகின்றது. அஞ்ஞான இருளை நீக்கி மெஞ்ஞான ஒளியை ஏற்றி இப்பிறவியிலும் மறுபிறவியிலும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு இறைவன் தேரேறி வருகின்றான். முத்தமிழால் வைதாரை வாழவைக்கும் முருகப்பெருமான், தேவர் சிறைமீட்ட செல்வன் தமிழ்மக்கள் படும் அல்லலை நீக்கி நல் அருள் தந்தருள அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக. இத்திருவிழாவை அனைவரும் வழிபாடு செய்து சாந்தியும் சமாதானமும் கிடைக்க இறைவனைப் பிரார்த்திப்போமாக. அனைவருக்கும் முருகப் பெருமானுடைய ஆசி கிடைப்பதாக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.**



## ஆலய வரலாறு

கடைஞ்சிமால் என அழைக்கப்படும் குறிச்சியில் குடியிருந்த அமரர் சி.பொன்னையா, சி.சின்னையா, சி.சிவசுப்பிரமணியம் ஆகிய மூன்று சகோதரர்களும் பண்டு தொட்டு நொச்சிக்காட்டு வைரவர் அல்லது பட்டவேம்பு வைரவர் என நாமம் சூட்டி வைரவர் ஆலயத்திற்கு விளக்கு வைத்து வந்தார்கள். வருடம் தோறும் இவ்வாலயத்தில் சித்திரகுப்த விரதநாளில் சித்திரைக்கஞ்சி வழங்கி வருவது வழக்கம். அமரர் பொன்னையாவின் மனைவி நாகம்மா என்பவர் ஆலயத்தின் அருகில் இருந்த வேலணை மத்திய ஐக்கிய பண்டகசாலை என்னும் கூப்பன் கடையில் கூப்பன் அரிசி வேண்டவரும் கிராம மக்களிடம் வாரம் தோறும் ஒரு பிடி அரிசி தந்துதவுமாறு கேட்டு, அந்தப் பிடி அரிசியை அதே ஊர் மக்களுக்கு விற்று அதில் வரும் பணத்தைக் கொண்டு சூடம், தேங்காய் எண்ணெய் மற்றும் பூசைக்குரிய தேவையான பொருள்கள் வேண்டி வைரவரை வணங்கி விளக்கு வைத்து வந்தார்.

பட்டவேம்பு வைரவரை இக்கிராம மக்கள் குலதெய்வமாக தங்களின் அசைக்க முடியாத நம்பிக்கையில் வணங்கி வந்தார்கள். குடும்பத்தில் யாருக்கும் சுகயீனம் ஏற்பட்டால் பட்டவேம்பு வைரவா என வேண்டித் தொழுது தங்கள் குறைகளைக் கூறி வைரவருக்கு சூடம் கொடுப்பார்கள். வைரவக் கடவுளும் அவர்களின் குறைகளைத் தீர்த்து கிராமத்தில் எந்தத் துன்பமும் நிகழாது காத்துவருகின்ற வேளையில் வைரவக்கடவுள் கிருபையால் 31.03.1965 ஆம் ஆண்டு முருகா என அழைக்கப்படும் மு.சி.சிற்றம்பலம் அவர்கள் தனது அளவு கடந்த முருக பக்தியினால் வைரவர் ஆலயத் தையும் உள்வாங்கி அதன் அருகில் முருகன் ஆலயம் அமைக்க வேண் டும் என்ற அசைக்க முடியாத பக்தியில் ஒரு சபையைத் தனது தலைமையில் க.சதாசிவம், சோ.கந்தையா, ந.நாகலிங்கம், பே.கனகரெத்தினம், ஆ.செல்லத்துரை, சு.சீவரெத்தினம், ஈ.கே.ரி. தியாகராசா, சு.சிவகடாட்சம், வ.அருணகிரி இவர்கள் அனைவரையும் நிர்வாக சபையில் தெரிவு செய்து முருகன் ஆலய கட்டுமான பணிகளைச் செய்து கும்பாபிஷேக நிகழ்வும் இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து நித்திய பூசைக்கு சிவாச்சாரியார் மகேஸ்வரக் குருக்களை நிய மித்து பூசை வழிபாடுகள் நடைபெற்றன. விஷேடமாக நயினை ஆலய உற்சவத்தை முன்னிட்டு தாகசாந்தி வழங்கியதும் நல்லூர் முருகன் தேர்த் திருவிழாவுக்கு நயினையில் இருந்துவரும் பாதயாத்திரிகர்களுக்கு மதியஉணவு வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

இடம் பெயர்வுக்குப் பின் 1997ஆம் ஆண்டு வ.தியாகராசா ஆசிரியர் தலைமையில் நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டு ஆலயத்திற்கு உரிய விஷேட பூசைகள் யாவும் சிறப்பாக நடைபெற்று வந்தன. 28.02.2002ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் திறம்பட நடைபெற்றது. தலைவர் வ.தியாகராசா அவர்கள் அமரரானபடியால் தலைமைப் பதவிக்கு சோ.பசுபதி என்பவர் தெரிவு செய்யப்பட்டார். இவர் வெளிநாடு சென்றபடியால் உபதலைவராக இருந்த கை.மகேந்திரலிங்கம் தலைமையில் இவ்வாலயத்தின் நிகழ்வுகள் யாவும் நடைபெற்று வருகின்றன.

2008ஆம் ஆண்டு ஆடி 07ஆம் நாள் (23.07.2008) புதன்கிழமை கொடியேற்றத்துடன் திருவிழா நடைபெற்று வருகின்றது. (31.07.2008) இன்று ஆடி 16ஆம் நாள் தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.

அமரர் மு.சி.சிற்றம்பலம் தலைமையிலான நிர்வாகத்தினால் செயல்பட்டுவந்த நிகழ்வுகள் யாவும் நடைபெற்று வருகின்றன.

"மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

**ஆலய பரிபாலன சபையினர்.**

## உப தலைவரின் செய்தி



எமது தீவகத்தின் நன்னிலமாகவும் வேலவனின் வேலணைந்த தெய்வப் பூமியாகவும் திகழும் வேலணை மாநகரின் வங்களாவடியில் அமைந்துள்ள ஆலயத்தில் குடிகொண்டுள்ள முருகப் பெருமான் தன்னைத் தொழுவோர்க்கு வேண்டுவதை வேண்டியே அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றான்.

இவ்வாலயமானது வருடா வருடமாக எம்பெருமானின் கடாட்சத்தால் வளர்ச்சியடைந்து இம்முறை கொடித்தம்பம் ஸ்தாபிக்கப்பட்டு கொடியேற்றத் திருவிழா பெரும் சிறப்பாக நன்றே நடாத்தப்பட்டது.

மேலும் இம்முறை எம்பெருமான் ஸ்ரீவள்ளி தேவ சேனா சமேதராக தேரேறி வீதி உலா வரும் காட்சியும் நடைபெற இருப்பது [illegible] மைந்தர்களின் இதயத்தை மகிழ்விக்கும் [illegible] சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகும்.

தினம் தோறும் எம்முருகனை வணங்கி தொழுது அவனருளைப் பெற்று இப்பிரதேச மக்கள் பெருவாழ்வு வாழ்வராகுக.

இவ்வாலயப் பரிபாலன சபையினரும் விழா உபயகாரர்களினதும் தெய்வப் பணி தொடர எம்முருகப் பெருமானை பிரார்த்திப்போமாக.

**கை.மகேந்திரலிங்கம்**
உபதலைவர், பரிபாலனசபை-செயலாளர்,
பிரதேச சபை வேலணை.


அருள்மிகு ஸ்ரீவள்ளி முருகப்பெருமான் தேர்த்திருவிழா
சிறப்புற நடைபெற வாழ்த்துபவர்கள்

**இந்திரா பல்பொருள் வாணிபம்**
பத்திரிகை விநியோகஸ்தர்கள்
குறிகட்டுவான் வீதி,
வங்களாவடி, வேலணை

**மைவிழி மரக்காலை**
சகலவிதமான மரங்கள், சிலாகைகள் குறித்த நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
வங்களாவடி, வேலணை

**ஸ்ரீ முருகன் ரேடர்ஸ்**
சகலவிதமான சில்லறைச் சாமான்கள், மரக்கறிவகைகள், வாழைப்பழம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
வங்களாவடி, வேலணை

**Kavinsan Construction**
Building Contractor, Highways,
Iron Works & Building Materials Supplier.
No, 255, Arasady Road,
Kantharmadam. Jaffna

**வேணி களஞ்சியம் பல்பொருள் வாணிபம்**
நியாயவிலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்

**அம்பாள் ஸ்ரோர்ஸ் பல்பொருள் வாணிபம்**
நியாய விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

**அம்பாள் ஸ்ரோர்ஸ் பல்பொருள் வாணிபம்**
சகல பொருள்களும் நியாய விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
வங்களாவடி, வேலணை

**றாபன் விவசாய விற்பனை நிலையம்**
சகலவிதமான உரவகைகள் கிருமிநாசினிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
வங்களாவடி, வேலணை

**ஜீவா உணவகம்**
சகலவிதமான உணவு வகைகள் காலை, மாலை, மதியம் உணவு வகைகள் குறித்த நேரத்தில் ஓடருக்கு பெற்றுக் கொள்ளலாம்.
வங்களாவடி, வேலணை

**வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்**
நுகர்ச்சிச் சேவை, கிராமியவங்கி சேவை, எரிபொருள் நிரப்பு நிலையம், கட்டட மூலப்பொருள் விற்பனை நிலையம், ஒப்பந்த வேலை செய்து கொடுத்தல், அரைக்கும் ஆலை, உற்பத்திப் பகுதி, போட்டோ பிரதிசேவை, சுயமுயற்சி கடன்சேவை, பால்கொள்வனவு விற்பனை, மொத்த, சில்லறை வியாபாரம் மற்றும் நவீன கூட்டுறவு நகர் மூலம் மக்களுக்கு நியாய விலைக்கு தரமான பொருள்கள் விநியோகித்தல்.
வங்களாவடிச் சந்தி, வேலணை

**நியூ சோதி ஸ்ரோர்ஸ் நிக்கடோ சோதி**
**NEW SOTHY STORES NICKADO SOTHY**
பிரதான விற்பனை & கொமிசன் ஏஜென்ட், மொத்த, சில்லறை விற்பனை நிலையம்.
WHOLESALE DEALERS IN RISE &CEYLON AGENTS,
26, st.John's Road,Colombo -11,
T.P.: No. 2430572 - 2337177.

**துவாரகன் பான்சி ஹவுஸ்**
சகலவிதமான அழகு சாதனப் பொருள்கள் அலங்காரப் பொருள்கள் நியாய விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
வங்களாவடி, வேலணை

**ஆசிரியர்கள், மாணவர்கள்**
**ஸ்ரீமுருகன் அறநெறிப் பாடசாலை**
வங்களாவடி, வேலணை

**மகாமாரி குளிரகம்**
சகலவிதமான உணவு வகைகள், குளிர்பானங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
வங்களாவடி, வேலணை

**வேணுகா ரேடர்ஸ் பல்பொருள் வாணிபம்**
சகலவிதமான பலசரக்கு பொருள்கள் மரக்கறி வகைகள் நியாய விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
வங்களாவடி, வேலணை

**விஜயன் வெதுப்பகம்**
சகலவிதமான சுவீற், கேக்வகைகள், ஐஸ்சிங் கேக் வகைகள் ஓடருக்கு குறித்த காலத்தில் குறித்த நேரத்தில் செய்துதரப்படும்.
வங்களாவடி, வேலணை

**சுதர்சன் வீடியோ**
சகலவிதமான புதிய, பழைய படங்களின் CD கசெற், படக்கசெற் என்பனவாடகைக்கு விடப்படும்.
வங்களாவடி, வேலணை

**நா.வில்வராசா**
உள்ளூர் உற்பத்திப் புகையிலையை பதனிடப்பட்டு தென்இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஏக விநியோகஸ்தர்.
சரவணை கிழக்கு, சரவணை — ஆஸ்பத்திரி வீதி, சங்கானை

**மாலன் களஞ்சியம் பல்பொருள் வாணிபம்**
மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

**அலங்கார் நகைமாளிகை**
அழகுமிகு தங்க, வைர நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் நவீன டிசைன்களில் செய்து பெற்றிட நாடுவீர்.
21/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**சண்முகானந்தா ரெக்ஸ்**
சகலவிதமான புடைவைகள் சூட்டிங், சேட் வகைகள் சிறியவர்களுக்கான புதிய டிசையினில் புடைவைகள் தரமான நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

**தினேகா கிறைண்டிங் மில்**
நெல்குற்றுதல், அரிசி, மிளகாய்த்தூள் வகை அரைத்தல். குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.
வங்களாவடி, வேலணை


பிரதம குரு: ஆகம கலாநிதி, சிவஸ்ரீ சுவைத்தீஸ்வரக் குருக்கள் (முத்துமாரியம்மன் கோயிலடி, பிரான்பற்று, பண்டத்தரிப்பு).
மகோற்சவ குரு: செ.மங்களேஸ்வரக் குருக்கள் (அராலி சித்திவிநாயகர் கோயில் - மாதகல்).
ஆலய குரு: பிரமஸ்ரீ குகதாச சர்மா (ஊரெழு).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## உயர்நீதிமன்றத்தின் முடிவு புதிய சட்டத் திருப்புமுனை

இலங்கையின் சட்டத்துறை வரலாற்றில் மிக முக்கியமான தீர்மானம் ஒன்றை இலங்கையின் உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் எடுத்திருக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு எதிரான முக்கிய வழக்கு ஒன்றை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டதன் மூலம் புதிய சட்டவாத, விவாதத்துக்கான அத்தியாயத்தை உயர்நீதிமன்றம் திறந்து விட்டிருக்கின்றது.

இலங்கை அரசமைப்பின்படி, ஜனாதிபதிப் பதவியை வகிக்கின்ற ஒருவர் அந்தப் பதவி முறையில் அல்லது தனிப்பட்ட முறையில் செய்த அல்லது செய்யாமல் விட்ட கருமம் தொடர்பாக அவர்மீது வழக்குத் தொடுத்தலோ, தொடர்ந்து வழக்கு நடத்தலோ ஆகாது. அரசமைப்பின் 35(1) பிரிவு இதனைத் தெளிவாகவும் சந்தேகத்துக்கு அப்பாற்படவும் தெரிவித்துள்ளது.

ஆக -

ஜனாதிபதி தன்வசம் வைத்திருக்கும் ஓர் அமைச்சின் அமைச்சர் என்ற முறையில் அந்த அமைச்சருக்கு எதிராகவோ -

ஜனாதிபதி உடற் சுகவீனம், மனச் சுகவீனம் ஆகியவை காரணமாகப் பணியாற்ற இயலாமல் இருக்கிறார், அரசமைப்பை வேண்டுமென்றே மீறியுள்ளார், தேசத் துரோகம் புரிந்துள்ளார், பதவித் துஷ்பிரயோகம் உள்ளடங்கிய துர்நடத்தை மற்றும் ஊழலில் ஈடுபட்டார், ஒழுக்கக் கேட்டுக்கு வழி செய்யும் தவறிழைத்தார் என்பன போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் அது குறித்து விசாரிக்குமாறு கேட்கப்பட்டாலோ -

அவரது ஜனாதிபதி தெரிவு தொடர்பான தேர்தல் ஆட்சேபனை வழக்கு ஒன்றின்போதோ -

மட்டுமே ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றத்தில் விசாரணை நடைபெறமுடியும்என இலங்கை அரசமைப்பு விளக்குகின்றது.

ஆனால் அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் கீழ் அரசமைப்புக் கவுன்ஸிலை ஸ்தாபிக்க ஜனாதிபதி தவறி விட்டார் என்று தெரிவித்து, நேரடியாக அவரை எதிர் மனுதாரராகக் குறிப்பிட்டுத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் இரண்டை நேற்று முன்தினம் பரிசீலித்த உயர்நீதிமன்றம் அந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்றதன் மூலம் ஜனாதிபதிக்கு எதிரான வழக்கு ஒன்றை விசாரிக்கும் தீர்மானத்தை எடுத்துப் புதிய சட்ட வரலாற்றை ஆரம்பித்து வைத்திருக்கின்றது.

இந்த வழக்கைப் பரிசீலித்த பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா இலங்கைத் தேசத்தில் 'யாரும் நீதிக்கு மேலானவர்கள் அல்லர்' என்று நீதிமன்றத்தில் பகிரங்கமாகக் கருத்தும் வெளியிட்டிருக்கின்றார்.

நாட்டின் உயர் சட்டம் அரசமைப்புத்தான். அந்த அரசமைப்பு வழங்கிய கட்டுமட்டில்லாத அதிகாரம் மூலமே இலங்கை ஜனாதிபதி, நாட்டில் நிறைவேற்று அதிகாரம் மிக்க முதல் பிரஜையாகக் கணிக்கப்படும் சிறப்பைப் பெற்றிருக்கின்றார்.

அப்படி நாட்டின் உயர் சட்டமான அரசமைப்பு மூலம் அதிகாரத்தைப் பெற்று, நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படக்கூடாது என்ற சிறப்புச் சலுகையை - சட்ட விலக்களிப்பை - சுவீகரித்திருக்கும் ஜனாதிபதி, அதே அரசமைப்பின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தாமல் உதாசீனம் செய்வாராயின், அந்த அரசமைப்பின் கீழ் தமக்குள்ள விசேட - சிறப்பு - சலுகையையும் பயன்படுத்தத் தகுதியற்றவராகவே ஆகின்றார்.

இத்தகைய காரணத்தை மனதில் கொண்டுதான், ஜனாதிபதிக்கு எதிரான மேற்படி அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றதோ என்னவோ தெரியவில்லை.

ஆனாலும் - எது, எப்படியென்றாலும் - நாட்டின் சட்டத்துக்கு மேற்பட்டவராக யாரும் கருதப்பட மாட்டார்கள் என்று பிரதம நீதியரசர் பகிரங்கமாக உயர்நீதிமன்றத்தில் குறிப்பிட்ட கருத்து, முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படுமானால் - செயலுருப்பெற வைக்கப்படுமானால் - பல அநியாயங்களும், அநீதிகளும் தொடராமல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்பது நிச்சயம்.

அரசமைப்பின் 17 ஆவது திருத்தப்படி அரசமைப்புக் கவுன்ஸில் ஒன்று நிறுவப்பட வேண்டும். இந்த அரசமைப்புக் கவுன்ஸில் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு, சுயாதீன நீதிச்சேவை ஆணைக்குழு, சுயாதீன பொதுச்சேவை ஆணைக்குழு போன்றவற்றை நியமிக்கும்.

இந்த சுயாதீன ஆணைக்குழுக்களே முறையே தேர்தல் ஆணையாளர், பொலிஸ்மா அதிபர், உயர் நீதித்துறை அதிகாரிகள் - நீதியரசர்கள், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் உட்படப் பொதுச் சேவை உயரதிகாரிகள் போன்றோரின் நியமனங்கள், தேர்தல் - பொலிஸ் - நீதி - பொதுச் சேவை தொடர்பான நியாயமான செயற்பாடுகள் போன்றவற்றைக் கவனிக்கும்.

இவ்விடயங்களில் அரசினதும் ஜனாதிபதியினதும் நேரடித் தலையீடும், அதிகாரச் செல்வாக்கும், அரசியலாதிக்கமும் ஒழிக்கப்படுவதற்கும் நல்லாட்சிக்கான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தவுமே இந்த அரசமைப்பு ஒழுங்கு விதிகள் கொண்டுவரப்பட்டன.

ஆனால் அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் கீழான அரசமைப்புக் கவுன்ஸிலைக் கடந்த மூன்று வருடங்களாக அமைக்காமல் - அரசமைப்பின் கீழ் தமக்கு ஒதுக்கப்பட்ட அக்கடமையை நிறைவு செய்யாமல் - இழுத்தடிப்பதன் மூலம், மேற்படி நீதி, தேர்தல், பொலிஸ், பொதுச்சேவை போன்ற துறைகளின் உயர் பதவிகளுக்கு அதிகாரிகளை நியமித்து மற்றும் அத்துறைகளைத் தனது இஷ்டப்படி வழிநடத்தும் அதிகாரத்தைத் தமது கைகளுக்குள் வைத்துக் கொண்டுள்ளார் ஜனாதிபதி.

இத்தகைய அரசமைப்புப் பொறுப்பை நிறைவேற்றத் தவறியமைக்காக ஜனாதிபதியை எதிர்மனுதாரராகக் குறிப்பிட்டுத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஜனாதிபதிக்கு 'நோட்டீஸ்' பிறப்பிக்க முடிவு செய்து, உயர்நீதிமன்றம் எடுத்திருக்கும் இத்தீர்மானம், இந்த வரிசையில் வெள்ளம் எனப் பெருக்கெடுக்கக் காத்திருக்கும் பல வழக்குகளுக்கான மடைவாசலைத் திறந்து விட்டிருக்கின்றது என்பது கவனிக்கத்தக்கதாகும்.

# இராமர் பாலத்தை தேசிய சின்னமாக அறிவிக்க முடியாது உச்சநீதிமன்றில் திங்களன்று மத்திய அரசு தெரிவிப்பு

புதுடில்லி, ஜூலை31

இராமர் பாலத்தை தேசிய சின்னமாக அறிவிக்க இயலாது என்றும் - ராமர் பாலத்துக்குசேதம் ஏற்படாமல் சேது திட்டத்தை மாற்றுவழியில் செயற்படுத்த தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்றும் உச்ச நீதிமன்றில் மத்திய அரசு தெரிவித்துள்ளது என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இதுகுறித்து தெரிவிக்கப்பட்டிருப் பவை வருமாறு:-

சேது சமுத்திரத் திட்டத்தை ஆதம் பாலத்தை (ராமர் பாலம்) இடிக்காமல் நிறைவேற்ற வேண்டும் என்று உச்ச நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. இதைபோல், ராமர் பாலத்தை தேசிய சின்னமாக அறிவிக்கக் கோரி ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா ஆகியோர் உச்ச நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

நேற்றுமுன்திணம் வழக்கு விசாரணை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன், நீதிபதிகள் ஆர்.வி.ரவீந்திரன், ஜே.எம்.பாஞ்சால் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. அப்போது மத்திய அரசு சார்பில் மூத்த சட்டத்தரணி பாலி நாரிமன் ஆஜராகி வாதிட்டார்.

அப்போது அவர் கூறியவை வருமாறு:-

தொல்பொருள் ஆய்வுத்துறை சார்பாக நாட்டின் புராதன சின்னமாக அதிகார பூர்வமாக அறிவிக்க இந்திய நாடாளுமன்றத்துக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. அதன்படி 1951ஆம் ஆண்டு அரசுமைப்புச் சட்டப்பிரிவு 7இன்படி அறிவிக்கப்பட்ட தேசிய புராதன சின்னங்களின் பட்டியலில் ராமர் பாலம் இல்லை.

ராம் - சேது எனப்படும் மணற் திட்டுகளை, தேசிய சின்னமாக அறி விப்பதற்கு அடிப்படையாக ஏது மில்லை. எனவே ராம் - சேதுவை தேசிய சின்னமாக அறி விக்க இயலாது. இந்த நிலைப்பாட்டில் மத்திய அரசு உறுதியாகவுள்ளது என்றார்.

# இழந்த நிலங்களை மீட்டெடுத்து இலட்சியத்தை வெல்வது உறுதி

## கடற்புலிகளின் துணைத்தளபதி கூறுகிறார்

கொழும்பு,ஜூலை,31

''எதிரிகளால் வன்பறிப்புச் செய்யப்பட்டுள்ள எமது நிலப்பகுதிகளை மீட்டெடுத்து எமது குறிக்கோளை உறுதியாக அடைவோம்.''

- இவ்வாறுதெரிவித்திருக்கிறார் கடற்புலிகளின்துணைத்தளபதிவிநாயகம்.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் முகாமையாளர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) கிளிநொச்சியில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிரியின் வன்பறிப்பு போர் முன்னெடுப்புக்களால் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளது. தமது தொழில்களை இழந்து இடம்பெயர்ந்துள்ள கடற்றொழிலாளர்கள் ஆயிரக்கணக்கானோர் மர நிழல்களின் கீழ் வாழும் நிலை உருவாகியுள்ளது.

பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை மக்கள் இழந்துள்ளனர். எதிரியின் திட்ட மிட்ட போர் வன்பறிப்பு நடவடிக்கைகளினால் பெரும் அவலங்களைச் சந்தித்துள்ள எமது மக்கள் ஏதிலிகளாக வாழும் அவலத்தை சிங்கள அரசு உருவாக்கியுள்ளது.

எமது மக்களின் அவலங்களைத் தீர்ப்பதற்கு எதிரியால் வன்பறிப்புச் செய்யப்பட்டுள்ள நிலப் பகுதிகளை மீட்டெடுத்து விடுதலைக் குறிக்கோளை அடைந்து கொள்வதுதான் தமிழர்களுக்குள்ள ஒரே முடிவு. அதனை நாம் செய்வோம் - என்றார். (க)

# அடையாள அட்டை இல்லாதவர்கள் மதவாச்சி சாவடியூடாகச் செல்லமுடியாது

கொழும்பு, ஜூலை31

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் தென்பகுதிக்குச் செல்வதற்கு மதவாச்சி சோதனைச் சாவடியில் அனுமதி மறுக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணமாக கடவுச்சீட்டு, வாகனங்களைச் செலுத்துவதற்குத் தகுதி பெற்றதை உறுதிப்படுத்துகின்ற அனுமதிப்பத்திரம், நிறுவனங்களில் பணிசெய்பவர்களாக இருந்தால், அதனை உறுதிப்படுத்துவதற்காக வழங்கப்படுகின்ற அடையாள அட்டை போன்றவற்றைக் காண்பித்துவிட்டு பலரும் மதவாச்சி சோதனைச் சாவடி ஊடாகப் பிரயாணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டு வந்தனர்.

எனினும், தற்போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளதால், தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள், தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக வேறு ஆவணங்களை வைத்திருந்தாலும், மதவாச்சி சோதனைச் சாவடியில் அவைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் மதவாச்சி சோதனைச்சாவடியில் வைத்து திருப்பி அனுப்பப்படுகின்றனர் எனத் தமது பிரயாணத்தை மேற்கொள்ள முடியாமல் திரும்பிவந்தவர்கள் தெரிவித்துள் ளனர். (சி)

# ஆடி அமாவாசைத் தீர்த்தம்

யாழ்ப்பாணம்,ஜூலை31

நெடுந்தீவு நடுக்குறிச்சி பெருக்கடி சித்தி விநாயகர் ஆலய ஆடி அமாவாசை தீர்த்தம் நாளை வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

அன்றுகாலை 5.30 மணிக்கு தீர்த்த யாத் திரைக்குச் சுவாமி எழுந்தருளுவார்.

அடியார்கள் பிதிர்க்கடன்களைச் செய்வதற்கு ஏற்றதாக மணக்கிணற்றடி தீர்த்தக்கரையில் திருவிழா இடம் பெறும். காலை 8 மணிவரை அடியார்கள் பிதிர்க் கடன்களை தீர்க்க முடியும். (203-267)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை31

காரைநகர் ஈழத்துச் சிதம்பர புனித தீர்த்தக் கரையில் ஆடி அமாவாசை தினமான நாளை வெள்ளிக்கிழமை காலை முதல் பக்தர்கள் தீர்த்தம் ஆடுவதற்கும் பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்குமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அன்றைய தினம் ஈழத்துச் சிதம்பரத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன. யாழ்.நகரில் இருந்து ஆலயம்வரை நேரடி பஸ்சேவைகளும் இடம் பெறவுள்ளது. (203-250)

# சமய சந்நிதிகளில்

வலி.வடக்கு,ஜூலை31

அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயப் பெருந் திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-80)

* * *

வடமராட்சி,ஜூலை31

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயப் பெருந்திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறவுள்ளது.

பெருந்திருவிழாவில் எதிர்வரும் 8ஆம் திகதி நவசக்தி அர்ச்சனை, திருவிளக்குப் பூசை என்பனவும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருமாங்கல்ய பூசையும் 13ஆம் திகதி வசந்தோற்சவமும் 14ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் சப்பறத் திருவிழாவும் இடம்பெறும்.

15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் இன்பருட்டி சமுத்திரத்தில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-236)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை31

ஆனைக்கோட்டை வீரமா பிடாரி அம்மன் ஆலயப் பெருந்திருவிழா கடந்த 26ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை31

காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவி பெருந்திருவிழாவில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா இடம் பெறவுள்ளது. மறுநாள் தீர்த்தத் திருவிழா நடைபெறும். (203-250)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 17 | 08.08.2008 வெள்ளிக்கிழமை |
| திதி: | அமாவாசை பி.ப. 04.50 வரை |
| நட்சத்திரம் : | பூசம் மு.இ. 07.18 வரை |
| ஆடி அமாவாசை விரதம் | |
| சுபநேரம் : | 06.03 - 07.33 |
| ராகுகாலம் : | 01.33 - 12.03 |

## மணி மஞ்சமெனும் தேரில் வரும் மாவை முருகா!



தேரினிலே ஏறிவரும் தெய்வமுருகா
தெய்வானை வள்ளிமகிழ் இன்பவழகா
பாரினிலே இன்றுபடும் வேதனையோட்டி
பாங்குடனே எமைக்காக்க ஆடிவருவாய்

அருமறையும் திருமறையும் சேர்ந்து ஒலிக்க
அரோஹரா என்றபக்திக் கீதமொலிக்க
வருமடியார் வடங்களையே தொட்டிழுக்க
வந்தருள்வாள் வீதிவலம் கண்டு அருள்வாய்

காலமகள் கோலமிதன் காட்சியும் காட்டி
கலிவெருண்டு ஓடுமின்ப அற்புதங்கூட்டி
ஞானமிதில் எமையாளும் மாவைமுருகா
நல்லமணி மஞ்சமெனும் தேரில் வருவாய்

சு.குகதேவன்
(தெல்லிப்பழை)




மனிதக் குருதிக்கு மாற்றீடு மனிதக் குருதியே

- உடலின் நிறை, குருதிச் செறிவு அறியப்படுகின்றது.
- உடல் நிலை (நாடித்துடிப்பு, குருதி அமுக்கம்) சோதிக்கப்படுகின்றது.
- குருதி வகை அறியப்படுகின்றது.
- குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்களின் குருதித் தேவைக்கு உதவ முடிகின்றது.
- வைத்தியசாலையுடனான உறவு நெருக்கமாகின்றது.
- ஆத்ம திருப்தி ஏற்படுகின்றது.
- குடும்ப, சமூகப் பொறுப்புணர்வு அதிகரிக்கின்றது.

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
021 222 3063

குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா—02.08.2008


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை வாடகைக்கு

பலாலி வீதி, கோண்டாவில், மதவடியில் முதலாம் கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு: திருமதி சின்னப்பிள்ளை நடராசா
174, பலாலி வீதி, கோண்டாவில். T.P: 222 7697 (சி/553971)



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1006 நிலம்

வெற்றி இலக்கங்கள்

மகரம் 13 45 50 52

29-07-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 4962654 - 4979494

ஜக்போட் பரிசு ரூபா.5,767,200/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 371,018 | 10/- | 3,710,180/- |
| 2 இலக்கங்கள் | 34,108 | 20/- | 682,160/- |
| 1 இல. + லக்கினம் | 33,693 | 30/- | 1,010,790/- |
| 2 இல. + லக்கினம் | 3,094 | 100/- | 309,400/- |
| 3 இலக்கங்கள் | 903 | 500/- | 451,500/- |
| 3 இல. + லக்கினம் | 81 | 5,000/- | 405,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 5,767,200/ | 5,767,200/- |
| மொத்தம் | | | 12,636,230/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 442,906 | | 13,136,230/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 4977787-1-45 |
| பதுளை | 4966993-0-28 |
| மாத்தறை | 4971739-4-05 |
| மட்டக்களப்பு | 4973332-1-00 |
| கண்டி | 4973701-7-36 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


# வீரவில விமான நிலையம் உடமத்தளவுக்கு மாற்றம்

கொழும்பு, ஜூலை 31

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் திட்டமிட்டபடி அம்பாந்தோட்டை வீரவிலவில் அமையாது என சிவில் விமான மற்றும் துறைமுக அமைச்சுத் தெரிவித்துள்ளது. இந்த விமான நிலையத்தை அதே மாவட்டத்திலுள்ள உடமத்தளப் பகுதிக்கு மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுவின் கூட்டத்தின் பின்னர் அமைச்சர் சாமல் ராஜபக்ஷ இது குறித்த தீர்மானத்தை அறிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

வீரவில மக்கள் விமான நிலையத்தை அமைப்பதற்கு வெளிப்படுத்திய எதிர்ப்பைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இதன் காரணமாக அருகில் உள்ள புந்தல தேசிய பூங்காவில் உள்ள பறவைகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு குறித்தும் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# தொகை மதிப்புக் கலந்துரையாடல்

தென்மராட்சிக் கல்விவலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான தொகை மதிப்பு தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 8 மணிக்குச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் படிவம், சுருக்கப்படிவம் ஆகியவற்றைக் கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்துரை அருளானந்தம்
(உரிமையாளர், அருள் லொறி)

தோற்றம் 05.07.1944 மறைவு 11.08.2007

திதி: சதுர்த்தசி 31.07.2008

அன்பூட்டி அமுதூட்டி வழிகாட்டி
எம் வாழ்வில் மெருகூட்டி
வளம் கூட்டிய தந்தையே!
சோதனைகள் பல தாங்கி
சோர்வின்றி வளர்த்தீர்கள்
வேதனையில் அப்பா என்று-
கதறுகின்றோம் - உங்கள் செவிதனில்
கேட்கவில்லையோ அப்பா!

G.P.S. வீதி,
கல்வியங்காடு.

பிரிவால் வாடும் : குடும்பத்தினர்
அ.கேதீஸ்வரன் (மகன்).

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.05.2007 இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ்.பிரதான வீதி - 104 | 27.09.2008<br>28.09.2008<br>04.10.2008<br>05.10.2008<br>06.10.2008<br>&<br>07.10.2008 | மக்கள் வங்கி, யாழ்.கன்னாதிட்டி - 284 |
| 2 | சேவைநிலையம், உரும்பிராய் | | |
| 3 | சாவகச்சேரி - 110 | | |
| 4 | சேவை நிலையம், கொடிகாமம் | | |
| 5 | யாழ்.பல்கலைக் கழகம் - 162 | | |
| 6 | சேவை நிலையம், திருநெல்வேலி | | |
| 7 | யாழ்.கன்னாதிட்டி - 284 | | |
| 8 | சேவைநிலையம், இணுவில் | | |
| 9 | யாழ்.ஸ்ரான்லி வீதி - 030 | | |
| 10 | சேவை நிலையம்,மானிப்பாய் | | |
| 11 | காங்கேசன்துறை - 031 | | |
| 12 | சேவை நிலையம், மல்லாகம் | | |
| 13 | அச்சுவேலி - 107 | | |
| 14 | சங்கானை - 108 | | |
| 15 | சுன்னாகம் - 109 | | |
| 16 | வல்வெட்டித்துறை - 141 | | |
| 17 | நெல்லியடி - 106 | | |
| 18 | பருத்தித்துறை - 285 | | |
| 19 | புங்குடுதீவு | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிப் பொதுமுகாமையாளர்,
வடவலயம்.

மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.


# கறுத்தகுழும்பன் ஸ்பெஷல்

## விசேட கழிவு - யாழ்ப்பாண கிளையில் மட்டும்

**PC 01**
Intel Celeron 3.0 GHz
P4 Main board
RAM 512 MB Kingston
VGA 128 MB integrated
Hard drive 80 GB SATA
15" Colour Monitor
P4 ATX casing
Keyboard Genius
Mouse Genius optical
DVD ROM
6 Channel Audio out
Speaker 480
10/100 integrated network card
Rs. 39,000/=

**PC 02**
Intel Pentium 4 3.0 GHz Processor
Gigabyte VM 900 Mother board
512 RAM Kingston
80 GB Hard drive SATA
15" Color Monitor
Casing High tower with front
USB + Audio out
Keyboard Genius
Mouse Genius optical
Combo Drive SATA
Speaker 480
Sound card 6 Channel Audio out
10/100 integrated network card
Rs. 43,000/=

**PC 03**
Intel Dual Core Processor
1.8GHz 1 MB
Or 3.0GHz Pentium D 4MB
Gigabyte 945 motherboard
1 GB RAM Kingston
VGA 226 MB Integrated
80 GB hard drive SATA
15" Color Monitor
P4 casing ATX
Genius optical mouse
Genius keyboard
DVD writer SATA
Speaker 480
Sound card 6 Channel Audio out
Rs. 45,000/=

**PC 04**
Intel Core 2 duo Processor 2.4 GHz
Gigabyte 945 Motherboard
1 GB RAM Kingston
160 GB Hard drive
17" Flat Monitor
P4 casing ATX
Sound card 6 Channel Audio out
Genius optical mouse
Genius keyboard
DVD writer
Speaker 480
10/100 Integrated network card
Rs. 55,000/=

**Motherboards**
945 GCM - S2L 7,000/=
945 GCM - S2C 6,000/=
G31M - S2L 7,750/=

**Processors**
1.6 GHz Pentium D 7,500/=
1.8 GHz Pentium D 8,000/=
2 GHz Pentium D 8,500/=
Core 2 Duo 2GHz 14,500/=

**RAM**
DDR II 512MB 1,750/=
DDR II 1GB 2,750/=
DDR II 2GB 5,250/=

**Hard Disks**
80GB SATA 4,750/=
160GB SATA 5,500/=
250GB SATA 7,500/=

**DVD Drive**
Combo Drive 3,250/=
DVD Writer 4,000/=

**Monitor's**
15" CRT 12,250/=
17" CRT Flat 16,000/=
15" LCD 19,750/=
17" LCD 23,250/=
19" LCD 26,500/=

**UPS**
Powertree 650 VA 6,000/=
Powertree 1.2 KV 13,000/=

**Pen Drives**
Kingston 1GB 850/=
Kingston 2GB 1,200/=
Kingston 4GB 2,300/=

**Casing**
ATX Casing 3,250/=

**Printers**
HP 2460 4,750/=

PC HOUSE PRIVATE LIMITED

பீ சீ ஹவுஸ் பிரைவட் லிமிடட்
யாழ்ப்பாண கிளை
இலக்கம் 01, கே. ஸ்டென்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலை பேசி இலக்கம் : 021 222 40 39 - வசந்தன்
தொலை நகல் : 021 222 40 39
மின்னஞ்சல் : jaffna@pchouse.lk
இணையத்தளம் : www.pchouse.lk
கையடக்கத்தொலைபேசி
ஜோய்குமார் - 0773 66 78 73


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலியில் இன்று இரண்டாவது டெஸ்ட்!

## பழிதீர்க்குமா இந்தியா?

கொழும்பு - ஜூலை 31

இலங்கை - இந்தியா அணிகளுக்கிடையில் இராண்டாவது டெஸ்ட் போட்டி இன்று காலியில் தொடங்குகிறது.

நேற்று பெய்த கடும் மழை காரணமாக காலி விளையாட்டு மைதானம் பெரும் வெள்ளத்தால் நிரம்பிக் காணப்பட்டது. இதனால் வீரர்கள் பயிற்சியில் ஈடுபடுவதில் பெரும் சிரமப்பட்டனர். எனினும், மழை ஓய்ந்த பின்னர் வெள்ளத்தை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் மைதானப் பராமரிப்பாளர்கள் ஈடுபட்டனர்.

இரு அணிகளுக்கிடையில் இம் மாதம் 23 ஆம் திகதி முதல் கொழும்பு, எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் இடம் பெற்ற முதலாவது டெஸ்ட்டில் இந்தியா அணி இலங்கையிடம் வசமாக வாங்கிக் கட்டியது. இந்தப் பெரும் தோல்வியை நிவர்த்தி செய்ய இன்று ஆரம்பமாகும் போட்டியில் இந்திய அணிவீரர்கள் சிறப்பாக செயற்படுவார்கள் என எதிர்பார்க்கலாம். எனினும், இலங்கை அணியின் சுழல் மன்னர்கள் முரளிதரன் மற்றும் அஜந்த மென்டிஸ் ஆகியோர் இந்தியத் துடுப்பாட்ட வீரர்களுக்கு கடும் சவாலாக விளங்குவார்கள் என்றும் எதிர்வு கூறப்படுகிறது.

இதற்கிடையில் இந்திய அணியின் களத்தடுப்புப் பயிற்சியாளர் றொபின் சிங் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தமை வருமாறு:-

முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்வியில் இருந்து நாம் நல்ல பாடத்தைக் கற்றுள்ளோம். நாளைய (அதாவது இன்றைய) போட்டியில் வெற்றிபெறுவதற்கு தேவையான மனநிலையை இந்திய வீரர்கள் பெற்றிருக்கின்றனர். முதல் டெஸ்ட்டில் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் இரு இனிங்ஸிலும் விரைவாக வெளியேறியது துரதிஸ்டவசமானதாகும். இது மற்றைய போட்டியில் தொடராது என நம்



பலாம். - என்றார். (சி)

## மேற்கிந்திய அணித் தலைவர் கிறிஸ்கெய்ல் ராஜினாமா!

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அந்த அணியின் தலைவர் பதவியை ராஜினாமா செய்வதாக கிறிஸ் கெய்ல் அறிவித்துள்ளார்.

லாராவுக்கு பிறகு அணித்தலைவர் பொறுப்பில் இருந்து வருபவர் கிறிஸ் கெய்ல். அவர் பொறுப்பேற்ற பிறகும் தோல்வி நிலை மாறவில்லை. இந்நிலையில் நடந்து முடிந்த ஆஸ்திரேலிய தொடரில் ஒரே ஒரு 'டுவென்டி - 20' போட்டியில் மட்டும் வெற்றி பெற்றது. டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் தோற்றது.

இதற்கு, தான் கேட்ட வீரர்களை தேர்வுக் குழு தரவில்லை என கெய்ல் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த நிலையில் பதவியை ராஜினாமா செய்து கடிதத்தைக் கிரிக்கெட் சபைத் தலைவருக்கு அனுப்பியுள்ளார்.

# சினிமாவில் சச்சின்!



இந்துக் கடவுள் விநாயகரின் அற்புதங்கள் குறித்து எடுக்கப்படும் ஹிந்திப் படத்தில் ஒரு முக்கியமான கதாபாத்திரத்தில் கிரிக் கெட் வீரர் சச்சின் டெண் டுல்கர் நடிக்கிறார். 'விக் நகர்த்த ஸ்ரீ சித்திவிநாயகக்' என்று இந்தச் சினிமா வுக்கு பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் பெய ருக்கு 'வினைகளைக் களையும் விநாயகர்' என்று அர்த்தம்.

சிறிய கதாபத்திரத்தில் நடிக்க சச்சின் ஒப்புக்கொண்டு இருக்கிறார் என தயாரிப்பு நிறுவனத்தின் ராஜிவ் சங்கவி தெரிவித்துள்ளார்.' ஒரு முக்கிய காட்சியில் அல்லது பாடல் காட்சியில் சச்சின் டெண்டுல்கர் நடிக்கிறார் என்று அவர் கூறினார்.

இதை டெண்டுல்கரின் அலுவலகமும் உறுதி செய்துள்ளது. ''இலங்கையில் இருந்து டெண்டுல்கர் நாடு திரும்பிய பிறகு இந்தச் சினிமாவில் நடிக்கிறார். டெண்டுல்கர் விநாயக பக்தர். எனவே, இந்தச் சினிமாவில் நடிக்கச் சம்பளம் வாங்க அவர் மறுத்துவிட்டார்.'' என்று தகவல்கள் வெளியாகியுள் என. இந்தச் சினிமாவை, மும்பை சித்திவிநா யகர் கோவில் அறக்கட்டளை தயாரிக்கிறது. அடுத்த மாதம் படப்பிடிப்பு துவங்குவதாக அறக் கட்டளையின் தலைவர் சபாய் மயேகர் தெரிவித்தார். இந்தப் படத்திற்கு நடிகர் அமிதாப் பின்னணிக் குரல் கொடுக்கிறார்.

# கனடாவில் நடக்கவிருந்த கிரிக்கெட் போட்டி ரத்து

பாகிஸ்தான், பங்களாதேஷ், மேற்கிந் திய தீவுகள், கனடா ஆகிய நான்கு நாடுகள் இடையே கனடாவின் ரொரன்டோ நகரில் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை நடக்க இருந்த 20 ஓவர் கிரிக் கெட் போட்டித் தொடர் கைவிடப்பட் டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட்சபை இதனை உறுதி செய்துள்ளது. ரொரன்டோவில் மைதானம் உள்ளிட்ட வசதிகள் போதுமான வகையில் இல்லை. போட்டி நடைபெற இருந்த மைதானங்களை பார்வையிட்ட மேற்கிந்திய அதிகாரிகள் அதிருப்தி தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

# சர்வதேச நீதிமன்ற விசாரணைக்காக ஹேய்க்குக்கு கொண்டு செல்லப்பட்டார் ரடோவன்



13 வருடங்களுக்கு முந்திய தோற்றம்



இப்போதைய தோற்றம்

பெல்கிரேட், ஜூலை 31

இனப் படுகொலைகள் தொடர்பாக கைது செய்யப்பட்ட முன்னாள் பொஸ்னிய சேர்ப் தலைவர் ரடோவன் சரோட்ஜிக், சர்வதேச குற்றவியல், நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார். இதன் பொருட்டு அவர், சேர்பிய தலைநகரான பெல்கிரேட்டிலிருந்து, ஹேய்க்குக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

கடந்த 13 வருடங்களாகத் தேடப்பட்டு வந்த ரடோவன், கடந்த வாரம் கைது செய்யப்பட்டார். அது முதல் சேர்பிய நீதிமன்றக் கட்டட தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்தார். செவ்வாய்க் கிழமை, பிற்பகல் 3.45 மணியளவில், மூன்று கார்கள் அடங்கிய வாகன அணியில் அங்கிருந்து விமான நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இம் மூன்று கார்களும் கறுப்புக் கண்ணாடிகள் பொருத்தப்பட்டவை. அவற்றில் ஒரு காரில் ரடோவன் இருந்தார். இக் கார் அணி, 12நிமிடங்களில் விமானத் தளத்தை அடைந்தது. அங்கிருந்து விமான மூலம், ஹேய்க்குக்கு கொண்டு செல்லப் பட்டார்.

ரடோவன் ஜூலை 21ஆம் திகதி பெல் கிரேட்டில் கைது செய்யப்பட்டார். அச்சமயம் அவர் மாறுபட்ட தோற்றத்தில் காணப்பட் டார். நீண்ட தாடியுடனும் 'யோனிரெயில்' கொண்டையுடனுமிருந்தார். இவர் மருத் துவராக பணிபுரிந்து வந்துள்ளார்.

கால அவகாசம் கோரி விண்ணப்பிப் பதற்கு, ரடோவனுக்கு, யுத்த குற்றவியல் நீதிமன்றம், கடந்த வெள்ளிக்கிழமை வரை காலக்கெடு விதித்திருந்தது. எனினும் இவ்வார செவ்வாய்க்கிழமை வரை, விண் ணப்பம் நீதி மன்றத்துக்குக் கிட்டவில்லை.

இதையடுத்து இவரை ஹேய்க் நீதி மன்றத்தில் ஒப்படைப்பதற்கான உத்தரவு, சேர்பிய நீதியமைச்சரால் பிறப்பிக்கப்பட் டது. இவர் கடந்த வாரம் கைது செய்யப் பட்டமைக்கு ஆட்சேபனை தெரிவித்து, ஆயிரக் கணக்காண ஆதரவாளர்கள் ஆர்ப் பாட்டப் பேரணிகள் நடத்தியுள்ளமை குறிப் பிடத்தக்கது.

பேரணிகளில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஆதரவாளர்கள் பங்குபற்றியிருக் கிறார்கள். அநேக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கு மிடையே கைகலப்புகள் நடந்துள்ளன. கடும் போக்கு தேசிய அடிப் படை வாத கட்சி, பரவலாக பேரணிகளுக்கு ஏற்பாடுகள் செய்திருந்தது.

## கலிபோர்னியாவில் நிலநடுக்கம்: உயரமான கட்டடங்கள் குலுங்கின

லோஸ் ஏஞ்சல், ஜூலை 31

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் நேற்று புதன்கிழமை காலை திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந் நில நடுக்கம் ரிச்டர் அளவில் 5.4 புள்ளியாக பதிவானது. கலிபோர்னியாவின் தெற்குப் பகுதி, லோஸ்ஏஞ்சல்ஸ் நகரம், சினோ ஹில்ஸ் பகுதி, மற்றும் சில பகுதிகளில் இந்த நில நடுக்கம் உணரப்பட்டது. இந்நில நடுக்கத்தில் உயரமான கட்டடங்கள், வீடுகள் பயங்கரமாகக் குலுங்கின.

இதைத்தொடர்ந்து பொது மக்கள் அலறி அடித்துக் கொண்டு வீடுகளை விட்டு வெளியே ஓடினார்கள். இந் நில நடுக்கம் 30 விநா டிகளுக்கு நீடித்தது. நில நடுக்கம் சினோ ஹில்ஸ் பகுதி அருகே மையம் கொண்டிருந்தது.

இந் நிலநடுக்கத்தால் அதிகளவு சேதமோ, உயிர் இழப்போ இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கலிபோர்னியா ஆளுனர் ஆர்னால்ட் நில நடுக்கத்திற்கு பிறகு செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசினார். யாரும் பீதி அடையத்தேவையில்லை. அதிர்ஷ்டவசமாக கலி போர்னியா தப்பி விட்டது என்று அவர் தமதுரையில் தெரிவித்தார்.

## நைஜீரியாவில் கட்டடம் இடிந்து 15 ஊழியர்கள் உயிரிழப்பு

அபுஜா, ஜூலை 31

நைஜீரியாவின் தலைநகர் அபுஜாவில் 4 மாடிகளைக் கொண்ட வணிக வளாக நிர்மாணப்பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கட்டிட வேலை முடியும் தறுவாயில் இருபதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். அப்போது அந்தக் கட்டிடம் திடீரென இடிந்து வீழ்ந்தது. இதில் தொழிலாளர்கள் இடிபாடுகளில் சிக்கினார்கள். இடிபாடுகளில் சிக்கியவர்களில் 5பேர் மட்டுமே மீட்கப்பட்டுள்ளனர். மற்றும் 15 பேரை இடிபாடுகளிலிருந்து மீட்கமுடியவில்லை. அவர்கள் பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

# ஈராக்கிய வட - கிழக்கு மாகாணத்தில் அல் - குவைதா வேட்டையில் துருப்புகள்

ஈராக்கிய வட - கிழக்கு மாகாணமான தியலாவில், அல் - குவைதா இலக்குகளை நோக்கி, அமெரிக்கப் படைகளின் உதவியோடு, ஈராக்கிய துருப்புகள் பாரிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளன என, ஈராக் கிய இராணுவ வட்டாரம் தெரிவித்தது.

பிராந்திய தலைநகரான பகுபாவில், துருப்புகள் குவிக்கப்பட்டன. கடமைகளில் அதிகளவில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர். பின்னர் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப் பட்டது. இதையடுத்து துருப்புகள் நேற்று புதன்கிழமை அதிகாலை தாக்குதல்களை ஆரம்பித்தன வென்றும் அது விளக்கியது.

அதேவேளை பாதுகாப்புப் படையினர் வீடு வீடாக சோதனையிட்டனர். பல வீடுகளிலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டன. சந்தேக நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள். தேடப்பட்டவர்களும் அதில் சிக்கியுள்ளார்கள் என, பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்தது.

''தியல மாகாணம் அல் - குவைதாவின் கோட்டையாகத் திகழ்கிறது. இவர்களின் இலக்குகள் நிர்மூலமாக்கப்படும். பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் அறவே ஒழிக்கப் படும். அயல் நாடுகளைச் சேர்ந்த பயங்கரவாதிகளின் ஊடுருவல்களும் தடுக்கப்படும். அதன் பொருட்டே பாரிய வேட்டை மேற்கொள்ளப்பட்டுள்ளது'' என, அமெரிக்க இராணுவப் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

''பாதைகள் மூடப்பட்டுள்ளன. சோதனைச் சாவடிகள் திறக்கப்பட்டுள்ளன. பாதசாரிகளும், ஏனையோரும் அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளார்கள். எனினும் இத் தேடுதல் வேட்டையை நாம் பெரிதும் வர வேற்கின்றோம்'' என ஊர்வாசிகள் ஏ.பி.என். செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்கள்.

# சவுதி அரேபிய மன்னர் உயிருக்கு அல் - குவைதா குறிவைப்பு

கெய்ரோ, ஜூலை 31

சவுதி அரேபிய நாட்டு மன்னர் அப்துல்லா உயிருக்கு அல் - குவைதா குறி வைத்து உள்ளது. சர்வமத மாநாட்டில் அவர் கலந்து கொண்டதற்காக அவரை முஸ்லிம்கள் கொலை செய்யவேண்டும் என்று அது கேட்டுக்கொண்டு உள்ளது.

சவுதி அரேபியர் மன்னராக இருப்பவர் அப்துல்லா. இவர் சமீபத்தில் ஸ்பெயின் நாட்டில் மேட்ரிட் நகரில் நடந்த சர்வமத மாநாட்டில் கலந்து கொண்டு அந்த மாநாட்டை தொடக்கி வைத்தார். இதில் யூதர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள், பௌதர்கள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய மன்னர் அப்துல்லா அனைத்து மதத்தினரும் தீவிரவாதத்தை கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்த மாநாட்டில் மன்னர் அப்துல்லா கலந்துகொண்டது, அல்- குவைதா தீவிர வாதிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனால் அவர்கள் மன்னர் அப்துல்லா உயிருக்கு குறிவைத்து உள்ளனர்.

அல் - குவைதா இயக்கத்தின் தளபதிகளில் ஒருவர் அபுயாகிய அல் லிபி. இவர் ஆப்கானிஸ்தானில் உள்ள பஹ்ராம் சிறையில் இருந்து 2008 ஆம் ஆண்டு தப்பித்தவர் ஆவார். இவர் இணையத் தளத்தில் ஒரு வீடியோ காட்சியை இணைத்து இருக்கிறார்.

43 நிமிடம் ஓடும் அந்த வீடியோவில், அனைத்து மதங்களையும் ஒன்று சேர்ப்பது என்பது இஸ்லாம் மதத்தை கைவிடுவது என்பதாக அர்த்தமாகிறது. இஸ்லாமிய மதத்தை மற்ற மதங்களுக்கு சமமாக பாவிப்பது, இஸ்லாமிய மதத்துக்கு செய்யும் துரோகம் ஆகும். எனவே இந்த துரோகத்தை செய்த சவுதி மன்னரை முஸ்லிம்கள் கொலை செய்யவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அல் -குவைதா தலைவரான ஒசாமா சவுதி அரேபியாவில் பிறந்து இருந்தாலும், அந்த நாட்டு மன்னர் அப்துல்லா அமெரிக்காவுடன் நட்பு பாராட்டுவதால் அவரை அடிக்கடி தாக்கி அறிக்கை விடுவதை வழக்கமாக கொண்டவர் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலையில் ஆடி அமாவாசை அனுஷ்டிக்க வழமையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

வலி. வடக்கு, ஜூலை 31

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலையில் நாளை ஆடிஅமாவாசைத் தீர்த்தத்திருவிழாவிற்குரிய வழமையான - சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மாவைக் கந்தன் காலை 8 மணிக்கு எருதுகள் பூட்டிய ரதத்தில் கீரிமலைக்கு எழுந்தருளுவார். கீரிமலை நகுலேஸ்வரரும் கண்டகி தீர்த்தக்கரையில் எழுந்தருளுவார். கண்டகி தீர்த்தம் முடிவடைந்ததும் அங்கு விசேட பூசைகள் இடம்பெறும். பிற்பகலில் முருகன் ஆலயத்திற்கு திரும்புவார்.

கீரிமலைக் கடலில் நீராடி பிதிர்க்கடன் நிறைவேற்ற விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆடிஅமாவாசைத் தீர்த்தத்தில் பங்குகொள்ளச் செல்லும் ப்க்தர்களுக்கு விசேட பஸ் சேவைகள் குடாநாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் தெல்லிப் பழைக்கும், சேந்தான்குளத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

போக்குவரத்து சபையினரும் தனியார் சிற்றூர்தி சங்கத்தினரும் இந்தச் சேவையை நடத்தவுள்ளனர்.

தெல்லிப்பழை சோதனை நிலையத்தில் இருந்தும் சேந்தான்குளத்தில் இருந்தும் விசேட பஸ்சேவையை ஆலயம் வரை போக்குவரத்துச் சபையினர் மேற்கொள்வர்.

கீரிமலை சென்று திரும்பும் பக்தர்களுக்கு தாகசாந்தி அளிக்க அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி நினைவாக தெல்லிப்பழையில் தண்ணீர்ப் பந்தல் ஒன்றை ஊர் மக்கள் அமைத்துள்ளனர். (அ-1-86)

## வெளிமாவட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யூடாக இங்கு விண்ணப்பம் கையளிக்கப்பட்ட சிவில் நிர்வாக அலுவலகம் பெற்றுக் கொள்ளும்.

அந்த உறுதிப்படுத்தல் கிடைத்த பத்து நாள்களுக்குள் விண்ணப்பதாரிக்கு பயண அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.

* அவசர தேவைகளுக்காக குறிப்பாக மரண வீடு, நேர்முகப் பரீட்சை, வெளிநாட்டு விஸா பெறுதல், அவசர சிகிச்சை ஆகிய தேவைகளுக்காக செல்பவர்கள் வழமைபோல் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, பயணம் மேற்கொள்ள வேண்டிய அவசரத் தன்மையை நிரூபிக்கும் வகையிலான ஆவணங்களுடன் அருகில் உள்ள சிவில் நிர்வாக அலுவலகத்தில் படிவத்தை ஒப்படைக்க வேண்டும்.

விண்ணப்பதாரி தங்கவுள்ள விலாசதாரருடன் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட சிவில் நிர்வாக அலுவலகம் உரியவழிமுறை ஊடாக சம்மதத்தைப் பெற்று உறுதிப்படுத்தி 48 மணி நேரத்துக்குள் அவர்களுக்கு பயண அனுமதி வழங்கப்படும்.

* அரச அதிகாரிகள், அரச சார்பற்ற அமைப்புகளின் அதிகாரிகள் ஆகியோர் அலுவலகப் பணிக்காக பயணம் மேற்கொள்ள வேண்டுமாயின், வழமைபோல் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, தமது திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் கையளிக்க வேண்டும்.

தேசிய அடையாள அட்டை, பயணம் மேற்கொள்வதற்கான காரணத்தை விளக்கும் கடிதம் ஆகியவற்றின் இரு பிரதிகளை தயாரிக்க வேண்டும். அவற்றின் பிரதிகளை திணைக்கள தலைவர்கள் மூலம் சிவில் நிர்வாக அலுவலகத்தில் கையளிக்க வேண்டும். சம்பந்தப்பட்டவர் மூலப் பிரதியுடன் 'போட்டோஸ்டட்' பிரதியுடனும் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பத்தை கையளிக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட அதிகாரி கொழும்பில் தங்கியிருக்கும் விலாசத்தில் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு இவர் அங்கு தங்குவதற்கான சம்மதம் இங்குள்ள சிவில் நிர்வாகப் பிரிவினால் பெறப்படும். அது கிடைத்ததும், அனேகமாக நான்கு நாள்களில் பயண அனுமதி வழங்கப்படும்.

* இந்த நடைமுறையில் பயண அனுமதி பெற்றவர்கள் வெளிமாவட்டத்தில் தங்கும் காலத்தில் அங்கு பொலிஸ் அனுமதி (கிளியரன்ஸ்) பெறாமலே இங்கு வழங் கப்படும் பயண அனுமதியைப் பயன்படுத்தி தங்க முடியும்.

* குடாநாட்டில் 10 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்ட சகலருக்கும் இவ் வருட இறுதிக்குள், பெரும்பாலும் நவம்பர் மாதத்துக்குள் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படும். அதன் பின்னர் பயண அனுமதி வழங்கும் நடைமுறை மறுபரிசீலனை செய்யப்படும்.

(அ-1)


விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை:417, K.K.S வீதி, (யாழ்.இந்துக் கல்லூரி அருகில்) யாழ்.
3ம் தவணை
தரம் 6 தொடக்கம் O/L வரை (1 மணி) (10 மணி)
02.08.08
O/L Paper Class
விஞ்ஞானம்: திரு.தேவா
கணிதம்: திரு.விக்கி
திரு.ரூபன்
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.


## 'சார்க்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சி எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலின்போது மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில்தான் இப்போது 'சார்க்' மாநாடு நடத்தப்படுகிறது. 'சார்க்' மாநாட்டை இலங்கையில் நடத்த வேண்டாம் என்று நாம் கூறவில்லை. உரிய நேரத்தில் நடத்துமாறுதான் கேட்டோம்.

ஆனால், அரசு பலநூறுகோடிக்கணக்கான ரூபா பணத்தைச் செலவு செய்து இந்த மாநாட்டை நடத்துகிறது. மாலைதீவில் நடத்தப்படவிருந்த சார்க்கைப் பலவந்தமாகப் பெற்று இங்கு நடத்தும் அரசு இதன்மூலம் இந்நாட்டு மக்களுக்கு என்ன கிடைக்கின்றது என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

கிடைப்பவை அனைத்தையும் பட்டியலிட்டு இந்நாட்டு மக்களுக்கு அரசு தெரிவிக்க வேண்டும். (அ-சி)

## இருதரப்பும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்த விடயங்கள் வருமாறு:-

வன்னி நிலப்பரப்பில் இராணுவத்தினர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் காரணமாக அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து பாரிய நெருக்கடிக்குள் ளாக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களைப் பாதுகாப்பதற்குரிய ஒழுங்குகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என நான் அமைச்சர்களைக் கேட்டுக்கொண்டேன். அங்குள்ள 4 இலட்சம் மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி புரிவதற்கு தடை ஏற்படுத்தக்கூடாது என்றும் நான் அவர்களிடம் கோரிக்கை விடுத்தேன்.

மன்னார், வவுனியா மாவட்டங்களின் மனித உரிமை நிலைமைகள், போக்குவரத்துக்கள் தொடர்பில் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு மாற்று நடவடிக்கைகள் செய்து தரவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தேன்.

மடுமாதா திருவிழா இடம்பெறவேண்டும் என்றால் இருதரப்பினரும் மடுப்பிரதேசத்தை சமாதானப் பிரதேசமாகப் பிரகடனம் செய்து அங்கு செல்லும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும். அங்கு விடுதலைப் புலிகளும், அரச படையினரும் எமக்கு பாதுகாப்பு உத்தரவாதம் தரவேண்டும்.

அங்கு பாதுகாப்பு உத்தரவாதத்தைத் தருவோம் என அமைச்சர்கள் என்னிடம் தெரிவித்தனர். இராணுவத்தினர் உத்தரவாதம் தரும்வேளையில் விடுதலைப்புலிகளுடனும் இந்த விடயம் தொடர்பில் பேசி, அவர்களும் உத்தரவாதம் தந்தால்தான் இந்தத் திருவிழாவை நடத்துவதற்கு நாங்கள் முடிவெடுப்போம் எனவும் நான் அமைச்சர்களிடம் எடுத்துக் கூறினேன்.

மடுமாதா ஆலயம்ஓர் ஆன்மிகப் பிரதேசம். அந்த இடத்தில் ஆயுதப்பிரசன்னமோ, அரசியல் நோக்கங்களோ இருக்கக் கூடாது என்றும் அவர்களுக்கு விரிவாக விளக்கப்பட்டது - என்றார். (சி)


வந்துவிட்டது வெற்றித்தேர்வு !!
வெற்றித் தேர்வு.திருமலை.எஸ்.கணேசலிங்கம்
தரம்: 5வெற்றித்தேர்வு-21,22,23,24
கணேசலிங்கம் யாழ்ப்பாணம் வந்துவிட்டார்.
கருத்தரங்கு பற்றிய விபரங்கள் வெற்றித்தேர்வு 23,24ல்
விரைவாகப் பெற்று பதிவுசெய்யுங்கள். அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சகல புத்தகசாலைகளிலும்.
இளங்கலைஞர் மண்டபம். நல்லூர்.2.8.2008
துரைஜயாமண்டபம்.ஆனைக்கோட்டை.3.8.2008
பிரதேச சபை மண்டபம்.மாலுசந்தி.4.8.2008
காலை:8.30முதல் மாலை:2.30 வரை
மேலதிக விபரங்களுக்கு. 021 222 9016


## தரம் 5 ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 31

புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு தொடர்பாக யாழ். கல்வி வலையத்தில் தரம் 5 வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று பிற்பகல் 1 மணிக்குகோட்ட ரீதியாக இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கோட்ட ஆசிரியர்களுக்கு யாழ். மத்திய கல்லூரியிலும் நல்லூர்க் கோட்ட ஆசிரியர்களுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் கோப்பாய்க் கோட்ட ஆசிரியர்களுக்கு புத்தூர் அத்தியார் இந்துக் கல்லூரியிலும்நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் இருந்தும் ஓர் ஆசிரியர் வீதம் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (1)

## நேர்முகப்பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 31

சாவகச்சேரி வைத்தியசாலையில் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவி ருந்த சுகாதாரத் தொழிலாளர் ஆள் சேர்ப்பதற்கான செயன்முறை நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.

நாளை அழைக்கப்பட்டவர்களை அன்றைய தினம் சமுகமளிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1-51)

## மத்தியின் குரல் நாளை வெளியீடு

நல்லூர், ஜூலை 31

யாழ். மத்திய கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமான நாளை வெள்ளிக்கிழமை 'மத்தியின் குரல்' காலாண்டு சஞ்சிகை வெளியிடப்படவுள்ளது.

வண.பிதா எஸ்.ஏ. றொசான் அடிகளாரை ஆசிரியராகக் கொண்டு வெளியாகும் இச் சஞ்சிகையில் கல்லூரியின் வளர்ச்சி முன்னெடுக்கும் செயற்திட்டங்கள் ஆகியன இடம் பெறுகின்றன. (1)

## கல்கிஸையில் 11 பேர் கைது!

கல்கிஸை, இரத்மலானை மற்றும் கட்டுபெத்த ஆகிய பகுதிகளில் நேற்று இடம்பெற்ற திடீர் சோதனை நடவடிக்கையில் 11 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

(சி)

## கப்பல்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு விற்பனைக்கு வந்ததையடுத்தே தட்டுப்பாடு ஓரளவு நீங்கியுள்ளது.

முக்கிய உணவுப்பொருள்களான அரிசி, சீனி, பால்மா என்பன நேற்று யாழ். நகரப் பகுதிக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டன. அத்துடன் உப உணவுப் பொருள்களான பூடு, இஞ்சி, மஞ்சள், மரக்கறி எண்ணெய், செத்தல்மிளகாய் என்பன விற்பனைக்கு வந்துள்ளன.

கப்பலில் இருந்து இறக்கப்படும் பொருள்கள் உடனுக்குடன் ஏற்றப்பட்டு யாழ். நகரப் பகுதியில் உள்ள கடைகளில் இறக்கப்பட்டதை நேற்றுக் காணமுடிந்தது. அவற்றில் அரிசி, சீனி, பால்மா, பூடு என்பன தேவையான அளவு எடுத்துவரப்பட்டுள்ளன.

உணவுப்பொருள்கள் எடுத்துவரப்பட்டதையடுத்து அரிசி, சீனி மற்றும் பூடு ஆகியவற்றின் விலைகள் நேற்றுச் சற்றுக் குறைவடைந்தன. எனினும் கப்பலில் இருந்து இறக்கப்படும் பொருள்கள் இதுவரை முழுமையாக வந்து சேரவில்லையெனவும் அவை வந்து சேர்ந்த பின்னரே விலைகள் தீர்மானிக்க முடியும் எனவும் வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. பொருள்கள் முழுமையாக வந்து சேர்ந்தால் அவற்றின் விலைகள் மேலும் குறைவடைய வாய்ப்புள்ளதாக அவை மேலும் தெரிவித்தன.

இதேவேளை - உருளைக்கிழங்கின் விலையில் பெரிதாக மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. ஒரு சில கடைகளிலேயே அது விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது. (அ-50)

### தவறிவிட்டது

யாழ். மருத்துவ பீடத்துக்கும் கல்லியங்காடு மற்றும் நல்லூர் ஆகிய இடங்களுக்கிடையில் மகாலிங்கம் இரஞ்சிததர்சினி என்பவரின் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் அடங்கிய கறுப்பு நிறப் பேஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பினவரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

37/4, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P. No:0779232166

## வினாடி வினாப் போட்டி

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையால் தென்மராட்சி கிழக்கு பாடசாலைகளில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான வினாடி- வினாப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு சாவகச் சேரி பிரதேச மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (1-131)

## திருவையாற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ஜெற்' விமானங்கள் தாக்குதலை நடத்தின. இத்தாக்குதலில் பல வீடுகள் சேதமாகின.

அப்பகுதியை வட்டமிட்ட விமானங்கள் காலை 6.20 மணிக்கும் 6.30 மணிக்கும் நான்கு குண்டுகளை வீசின என்றும் அதிகாலை 3 மணியளவில் இரணைமடு மற்றும் வட்டக்கச்சிப் பகுதிகளை விமானப் படையினரின் வேவு விமானங்கள் நோட்டமிட்டன என்றும் - அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை, தாம் இரணைமடுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையை இலக்கு வைத்தே தாக்குதல்களை நடத்தினர் என்று விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

(சி)

## தமிழ்க்கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைக்கலநாதன், எஸ்.கனகசபை ஆகியோர் கொண்ட குழு இச்சந்திப்பில் பங்கேற்கவிருக்கின்றது.

தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அரசியல் தீர்வு மற்றும் கள நிலைவரம் தொடர்பாக இச்சந்திப்பில் இந்தியப் பிரதமருக்கு நேரில் விரிவாக எடுத்துரைக்கப்படும்.

அதேவேளை -

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஆனந்தசங்கரி தலைமையிலான மூன்று கட்சிக் கூட்டணிப் பிரமுகர்கள், இ.தொ.கா. தலைவர் எஸ்.தொண்டமான் ஆகியோரும் இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடாகி உள்ளது. (அ-1)

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரன் என்பவரே சம்பவத்தில் படுகாயமடைந்திருக்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் எம்.பியின் வீட்டின் வாசலில் நேற்று மாலை காவலுக்கு நின்றிருந்த வேளை அங்கு வந்த இனந்தெரியாத ஆயுததாரி இவர் மீது துப்பாக்கியால் சுட்டு விட்டுத் தப்பிச்சென்றுள்ளார் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

படுகாயமடைந்த மெய்ப்பாதுகாவலர் மட்டக்களப்பு, போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

## திருமலையில்...

(முத்லாம் பக்கத் தொடர்ச்சி)

பொற்கேணிப்பகுதியில் உள்ள வீதியில் சென்றுகொண்டிருந்த வேளை அங்கு வந்த ஆயுததாரிகள் இந்த இளைஞன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டு தப்பிச்சென்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் திருமலை, பொதுவைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

## திணைக்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

திணைக்களகங்களுக்கு சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்பை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என திணைக்களத் தலைவர்கள் பலரும் தளபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இந்தச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. திணைக்களத் தலைவர்கள் பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படாதவாறு தொலைபேசி சேவை பயன்படுத்தப்படும் என்று எழுத்து மூல உத்தரவாதத்தை வழங்கினால், பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு இணைப்பை பெற்றுத்தர ஏற்பாடு செய்யப்படுமென தளபதி தெரிவித்தார் என்று அறிய வந்தது. (அ-1)


THE SCIENCE CORNER, யாழ்நகர்
CHEMISTRY
A/L 2009
★முழு அலகு உள்ளடங்கலான மாதிரி வினா விடை
★அலகு ரீதியான துரிதமீட்டல்
★அச்சடிக்கப்பட்ட பாடக் குறிப்புகள்
★ சிறு அலகு ரீதியான கருத்தரங்கு
ஆரம்பம்:-01.08.2008
5.00 p.m
DIAS B.Sc.(Hons)

BIOLOGY
A/L 2010
உயிரியல் வகைமை
ஆரம்பம்:-01.08.2008
வெள்ளி. 4.30pm
By
V.A.ஞானேந்திரன்
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org